Registered as a News Paper in Srilanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 11 ஞாயிற்றுக்கிழமை (25.01.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 117

## சமையல் எரிவாயு விலை குறையும்

எரிபொருள் விலை குறைப்பை யடுத்து சமையல் எரிவாயுவின் விலையையும் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்புபட்ட சமையல் எரிவாயு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகார சபைக்கான பணிப்பாளர் சபையொன்றை நியமிக்குமாறு உணவுப் பாது

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய அரசினையும் நம்பத்தயாரில்லை

### போராட்டம் வெடிக்குமென மாவை சூளுரை

(வவுனியா)

நாங்கள் புதிதாக அமைந்துள்ள அரசாங்கத்தையும் நம்பி நடக்கவில்லை இந்த அரசிலும் எமக்கான தீர்வுகிடைக்காது போனால் ஏற்கனவே நாம் கூறியபடி திட்டமிட்டவாறு ஜனநாயக போராட்டம் வெடிக்குமென தமிழரசுக்கட்சியின் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா சூளுரைத்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகமாக தாயத்தினை

19 ஆம் பக்கம் பார்க்க



## பேருந்து கட்டணங்களும் அடுத்தவாரம் குறையும்

அடுத்த வாரத்தில் பஸ் கட்டணங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக உள்ளக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணக் குறைப்பு தொடர்பில் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ரஞ்சித் மெத்துமபண்டார குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் கடந்த தேர்தலின்போது வழங்கிய வாக்குறுதிக்கமைய அதிக வரிச்சுமையை நீக்கி மக்களின் வாழ்க்கைச்சுமையைக் குறைக்கும் திட்டத்தின் ஒரு கட்டமாக எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# மீள்குடியேறிய வட,கிழக்கு மக்களுக்கு ஐரோ.ஒன்றியம் வீடமைப்புத்திட்டம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்து மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான வீடமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குதல் போன்ற திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உட்கட்டமைப்பு மற்றும் புனர் நிர்மாண வேலைத்திட்டத்தின் இலங்கைக்கான முகாமையாளர் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான தலைவி லியுபே சோகுபோவா ஆகியோர், மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து மதவிவகார அமைச்சர் டி.எம். சுவாமி நாதனை நேற்று முன்தினம் சந்தித்த போதே இதனைக் குறிப்பிட்டனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இதுவரை 23,000 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 2015ஆம் ஆண்டு 14 மில்லியன் யூரோக்களை ஒதுக்கி குறைந்தது 3000 நிரந்தர வீடுகளை அமைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் மீள்குடியேற்றம் மற்றும் அந்த மக்களுக்கு அடிப்படை

19 ஆம் பக்கம் பார்க்க



## 13ஆவது திருத்தச்சட்டம் மூலம் தமிழர் பிரச்சினைக்குத்தீர்வு

### சகல கட்சிகளும் இணக்கம் என்கிறார் ரணில்



(கொழும்பு)

இலங்கையில் கடந்த மூன்று தசாப்தங்களாக நிலவிவரும் தமிழர் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தீர்வினை எட்டுவதற்கு சகல அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் தெனியாய பல்லேகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

13ஆவது திருத்தச் சட்டத்தினூடாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சகல கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. இது

19 ஆம் பக்கம் பார்க்க

## உண்ணாவிரதம் நிறுத்தம்

யாழ். குடாநாட்டில் நிலத்தடி நீரினைப் பாதுகாக்கக் கோரி சுன்னாகம் சிவன் கோவிலுக்கு முன்பாக நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டம் நேற்றையதினம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் உண்ணாவிரத ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

குறித்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்த வைத்தியர்கள் மற்றும் பாதிக்கப்பட்டமக்களுக்கு சூழல் பாதுகாப்பு அமையம் வழங்கிய வாக்குறுதிகளையும், அவர்களுடைய கோரிக்கைக்கு அமைவாக மத்திய அமைச்சர் வழங்கிய வாக்குறுதிகளையும் அடிப்படையாகக் கொண்டு தாம் உண்ணாவிரதத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்திருக்கின்றனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

– 10 இலட்சம் ரூபா நகைகள் –

## நாவலர் வீதியிலுள்ள வீடொன்றில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் நாவலர் வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் காவலாளியை அச்சுறுத்தி 10 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது நாவலர் வீதியிலுள்ள கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வீடொன்றினுள் புகுந்த 7பேர் கொண்ட கொள்ளைக்கோஷ்டி , வீட்டுரிமையாளர் இல்லாத நிலையில் காவலாளியை அச்சுறுத்தி, தாக்கிய அவரிடம் இருந்த வீட்டுத்திறப்பை எடுத்ததுடன் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த் காரினுள் மறைத்து வைத்திருந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## அதிபர்களுக்கான கேணல் பதவி இரத்து


(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தினால் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்ட கேணல் பட்டம் இரத்துச் செய்யப்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அத்துடன் பாடசாலை அதிபர்களுக்கு இதுவரை காலமும் இராணுவ முகாம்களில் வழங்கப்பட்டு வந்த தலைமைத்துவப் பயிற்சிகள் எதிர்வரும் சில நாட்களுக்குள் இரத்துச் செய்யப்படும் என கல்வி

19 ஆம் பக்கம் பார்க்க



# மோட்டார் சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்



(கரணவாய்)

கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

முன்னுக்கு பின்னாக வந்த இரு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று திரும்ப முற்பட்ட வேளையிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் வதிரியைச் சேர்ந்த சண்முகம் சுப்பிரமணியம் (வயது 57) கைதடி தெற்கைச் சேர்ந்த இராஜேந்திரம் பிருந்தாபன் (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

இவ்விபத்துச் சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (18)

# மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதிநிதிகளாகவே செயற்படுவோம்

## நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்



கடந்த ஐந்து வருடங்களில் எங்கள் மக்களின் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பினும் அவை போதுமானதாக இல்லை. மக்கள் இன்னும் தேவைகள் உள்ள சமூகமாகவே வாழ்கின்றனர். எனவே நாமும் கடந்த காலங்கள் போன்று தொடர்ந்தும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற பிரதிநிதிகளாகவே செயற்படுவோம் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி மற்றும் கரைச்சி பிரதேச செயலக பிரிவுகளில் நாடாளுமன்ற உறுப்பினரின் கடந்த வருட பன்முகப் படுத்தப்பட்ட 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

எமது மக்களின் அரசியல் உரிமைகள் தொடக்கம் அடிப்படை உரிமைகள் வரை எல்லா விடயங்களிலும் நாம் தொடர்ந்தும் எங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வோம். தமிழ் மக்கள் ஒரு நிம்மதியான வாழ்கையை அடைய வேண்டும் அதற்கான எங்களது உழைப்பு என்றும் இருந்துகொண்டே இருக்கும் எனவும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

மீள்குடியேற்றத்தின் போது எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் காணப்பட்ட கிளிநொச்சி மாவட்டம், தற்போது மீள்குயேற்றத்தின் பின்னரான இந்த காலப்பகுதியில் பெருமளவு அடிப்படை வசதிகள் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் நாம் மாற்றத்தை கண்டுளளோம். எனினும், இந்த வசதிகள் போதுமானதாகவில்லை.

நாம் மக்களின் பல தேவைகளை நிறைவேற்றியிருக்கும் அதேவேளை இன்னும் தேவைகள் உள்ள மக்களிடம் உறவுகளைப் பேணி வந்திருக்கின்றோம். இது மறுக்கப்பட முடியாத உண்மை. நாம் மக்களை அழிவுப் பாதைக்குள் கொண்டு செல்லும் உபாயத்தை முன்னெடுக்கவில்லை. மக்களின் கிராமம், அவர்களின் பிள்ளைகளின் கல்வி, வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் ஆகிய விடயங்களில் முக்கிய கவனம் செலுத்தி அந்த விடயத்தில் நாம் வெற்றியடைந்திருக்கின்றோம் என்றார்.

கரைச்சி பிரதேசத்தைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்கள், கடற்றொழில் சங்கங்கள் உள்ளிட்ட 7 அமைப்புகளுக்கு கணனித் தொகுதிகள் 126 பயனாளிகளுக்கு ஆடு, 16 பயனாளிகளுக்கு மாடு மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதோடு, பூநகரியைச் சேர்ந்த 7 மக்கள் அமைப்புகளுக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் கதிரைகள், தகர பந்தல் உள்ளிட்ட பொருட்களும், 123 பயனாளிகளுக்கு அவர்களின் தெரிவுகளுக்கு அமைய கற்றொழில் வலைகள் உள்ளிட்ட பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன்,பூநகரி பிரதேச செயலாளர் சத்தியசீலன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன்,பூநகரி பிரதேச சபை உறுப்பினர்கள் இராசலிங்கம், குகேந்திரன் பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், கரைச்சி பிரசேத சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (29)

# DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | SUNDAY |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | MORNING SONG |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | புதுயுகம் |
| Am 10.00 | தமிழ் பேச தமிழா |
| Am 10.30 | Hello DD |
| Am 11.00 | அதிர்வுகள் |
| Am 12.00 | ஆரோகனம் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | திரைப்படம் |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | IT.Com |
| PM 07.30 | மக்கள் முகம் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# இறுதியாட்டமும் பரிசளிப்பும்

முல்லைத்தீவு கூடைப்பந்தாட்ட சங்கம் நடாத்தும் வடமாகாண ரீதியிலான கூடைப்பந்தாட்ட இறுதியாட்டமும் பரிசளிப்பும் இன்று இடம்பெறுகின்றது.

மல்லாவி மத்திய கல்லூரியில் பிற்பகல் 4 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு கூடைப்பந்தாட்ட சங்கத்தலைவர் க.கயதேசன் தலைமையில் நடைபெறும் இந்த இறுதியாட்ட நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வெற்றியட்டிய அணிகளுக்கு பரிசில்கள் வழங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.. (93)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 328

திகதி - 2015.01.23

வர்ணம் - நீலம்

வெற்றி இலக்கங்கள்

ஆங்கில எழுத்து

14 24 34 60 W

பரிசுத் தொகை ரூபா. 21,727,160/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 212 | 212,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 392 | 392,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8988 | 539,280/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4784 | 191,360/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 117911 | 2,358,220/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17020 | 340,400/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 21,727,160/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,383,260/- |

எதிர்வரும் செவ்வாய்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 21,958,120/-

2015.01.27ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்க்ள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3803)


# படைப்பிலக்கிய வெளியீடுகள்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையுடன் பூநகரி பிரதேச செயலகம், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்தும் படைப்பிலக்கிய வெளியீடுகளான "வலிகளின் பொதி", "அறியாமலே", "பூநகரி பிரதேச கூத்துக்கலை காவலர்கள்" ஆகியவற்றின் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிவலிங்கம் சத்தியசீலன், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசன் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து ஆவணக்காப்பக திறப்பு விழா இடம்பெறும். மேலும் வலிகளின் பொறி கவிதைத் தொகுதிக்கான வெளியீட்டுரையை கவிஞர் இ.த.ஜெயசீலன் "அறியாமலே" இறுவட்டுக்கான வெளியீட்டுரையை நெடுந்தீவு முகிலன் "பூநகரி பிரதேச கூடத்துக்கலை காவலர்கள்" ஆய்வுக்கட்டுரைக்கான வெளியீட்டுரையை எஸ்.விந்தன் வழங்கவுள்ளார்.

# சாரதி, நடத்துனர்களுக்கு அடையாள அட்டைகள்

தனியார் பஸ் சாரதிகள், நடத்துனர்கள் 130 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தூர சேவை பஸ் சங்கத்தலைவர் சி.சிவபரன், நேற்று தெரிவித்தார்.

தனியார் பேருந்து சாரதிகள், நடத்துனர்கள் வாகனத்தை ஓட்டும் போது தொலைபேசி பாவிக்கக் கூடாது. அதிக வேகத்தில் வாகனத்தை ஓட்டக் கூடாது முதலான அறிவுரைகளும் இதன்போது வழங்கப்பட்டது. இவர்களுக்கான சீருடைகளும் மிக விரைவில் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் 42 தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதோடு 7தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு சுழற்சி முறை கடனும் வழங்கப்பட்டது. இந்தக் கடன் எதிர்வரும் மார்ச் மாதம் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (25)

# குளிர் காயிற அரசியல்...



## வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

கழிவு ஓயில் பிரச்சினை வலிகாமம் பிரதேசத்தைப் போட்டு உலுக்குகிற அதேவேளை எங்கடை கழிவு அரசியலும் இதிலை நல்லாய் விளையாடுது பாருங்கோ!

2009ஆம் ஆண்டு சுன்னாகம் மின்சார சபை சூழலிலை இரண்டு தோட்டக் கிணறுகளிலை ஓயில் கலந்திட்டுது எண்டு செய்தி வந்துது. ஆரும் கண்டு கொள்ளேல்லை. அதுக்குப் பிறகு வேறை சில கிணறுகளிலையும் பரவிச்சுது எண்டு செய்தி வந்த நேரம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலை சந்திரகுமார் எம்.பி. இது தொடர்பாக அறிக்கை கேட்டிருந்தார். பிறகு அமைச்சர் டக்ளஸ் தலைமையிலை உள்ளூர் மக்கள் அமைப்புகளின்ரையும், நிபுணர்களின்ரையும் குழுவொன்று போய் நிலைமையை மதிப்பீடு செய்துது.

அது நடந்தவுடனை எங்கடை கூட்டமைப்பாரும் கண் முழிச்சு எழும்பிச்சினை. முதலமைச்சரும் விவசாய அமைச்சரும் இது பற்றி ஆராய்ஞ்சினை எண்டு பேப்பர் செய்தி வந்துது. ஆனால் சனத்தின்ரை ஓயில் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் வரேல்லை. மாகாண சபையிலையும், பாராளுமன்றத்திலையும் பேசு பேசெண்டு பேசினதுதான் நடந்தது.

புற்றுநோய் உடம்பிலை பரவிற மாதிரி பல இடங்களுக்கும் தண்ணிப் பிரச்சினை வந்தாப் பிறகு சனங்கள் தாங்களாகவே ஏதாவது செய்ய வேணுமெண்டு நினைச்சினை. அப்பிடி நினைச்சவை பல இடங்களிலையும் கூட்டங்களை வச்சுப் பாத்தினை. சரி வரேல்லை.

அப்பதான் ஒரு கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்திற தீர்மானத்தை எடுத்து, பத்திரிகைக்காரங்களுக்கும் அறிவிச்சு நடத்திச்சினை. ஊர்வலம் ஆரம்பிக்கிற நேரம் பார்த்து கூட்டமைப்பு அரசியல்வாதியள் எல்லாம் வந்திட்டினை எண்டு கவலைப்பட்டார் ஏற்பாட்டாளர் ஒருவர்.

அரசியல் சாயமேதும் இல்லாமல் மக்களின் போராட்டமாய் அதை ஆக்கப் பார்த்தவை எல்லாம் பின்னுக்கு நிக்க முன்வரிசையிலை சரவணபவன், ஐங்கரநேசன், சர்வேஸ்வரன், சித்தார்த்தன், கஜதீபன் எண்டு கூட்டமைப்பு பிரபலங்கள் வந்து அமர்ந்து கொண்டினை. பேசவும் செய்தினை. வாக்குறுதியளையும் அள்ளி வீசிச்சினை. சரவணபவனே போராட்டத்தை நடத்தின மாதிரி பத்திரிகை எழுதிச்சுது.

அதுக்குப் பிறகு ஒண்டையும் காணோம். அப்பதான் உண்ணாவிரதப் போராட்டம் ஒண்டை சுற்றாடல் பாதுகாப்பு அமையத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் மற்றும் பிரதிநிதியள் ஆரம்பிச்சினை. அப்பிடி ஆரம்பிச்சு, தொடராய் அதை நடத்திக் கொண்டு, மற்றப் பக்கம் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையிலை கொழும்பிலை மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவைச் சந்திச்சினை.

இவையின்ரை விளக்கத்தைத் தொடர்ந்து அமைச்சர் நொதேர்ன் பவர் நிறுவனத்தின் செயற்பாட்டை இடைநிறுத்திற உத்தரவை விடுத்தார். இந்தச் செய்தி ஊடகங்களிலை கசிஞ்ச உடனை சரவணபவன் தன்ரை பத்திரிகையிலை தான் சம்பிக்கவுடன் கலந்துரையாடியதிலைதான் இது நடந்தது எண்ட மாதிரி அறிக்கை விட்டிருக்கிறார். சுரேஸோ ஒரு படி மேலே போய் பிரதமர் ரணிலோடை இது பற்றிப் பேசியிருக்கிறாராம்.


கழிவு ஓயில் பிரச்சினைக்குத் தீர்வு வருமோ இல்லையோ இந்தப் பிரச்சினை கழிவு அரசியலுக்கு நல்லாய் பயன்படுகுது பாருங்கோ! கழிவு ஓயிலை வெளியிலை விட்ட நேரமும் சம்பிக்கதான் அமைச்சர். இப்பவும் அவர்தான் எண்டது ஒரு விசியம்.

உலகத்திலை பல இடங்களிலை அனல் மின் நிலையங்கள் இருந்திருக்குது. அங்கை சில இடங்களிலையெண்டாலும் கழிவு ஓயில் கசியிற பிரச்சினை ஏற்பட்டிருக்கும். கடலிலை எண்ணைக் கப்பல்களிலையிருந்து எண்ணை கசிஞ்சிருக்குது. இதுக்கெல்லாம் சரியான தீர்வு காணப்பட்டிருக்கும். அந்த அனுபவங்களை இங்கை பயன்படுத்த ஆரும் எண்ணேல்லையே! உலகத்து நிபுணர்களோடை கலந்துரையாடேல்லையே எண்டது இரண்டாவது விசியம்.

கூட்டமைப்பு தாங்களாய் ஒரு மக்கள் போராட்டத்தை ஏற்படுத்தி நடவடிக்கை எடுக்கிறதுக்குப் பதிலாக குளிர் காயிற அரசியல் செய்யிறது மூண்டாவது விசியம்.

இதுகளைச் சனங்கள் அப்பாவித் தனமாய் நம்பிறது நாலாவது விசியம். எம்பெருமானே! சனங்களைக் காப்பாத்து!

அது சரி. வடக்கு மாகாண சபை கழிவு ஓயில் பிரச்சினையை ஆராய ஒரு இரகசிய நிபுணர் குழுவை அமைச்சிருக்குதாம். அதிலை ஆரார் இருக்கினை எண்ட விசியத்தை வெளிப்படுத்த முடியாதாம். சத்தியமா உங்களுக்கு ஒண்டுந் தெரியாதே மகா சனங்களே!




அந்த நிபுணர் குழுவினர் ஒரு பள்ளிக்கூடத்துக்குப் போச்சினமாம். கிணத்தைப் பாத்தினமாம். ஒருத்தர் கிணத்துக்கை கல்லொண்டை எடுத்து எறிஞ்சு பாத்திட்டுச் சொன்னாராம் ஓயில் கலந்திட்டுதெண்டு. மற்றவர் மணந்து பார்த்துச் சொன்னாராம் 'ஓம்... ஓயில்தான்'. இன்னொருவர் வாய்க்குள் நீரை விட்டுப் பார்த்து 'ஓயில் தண்ணிதான்' என்றாராம்.

நிபுணரிலை ஒருத்தர் ஐங்கரநேசன். மற்றவை பல்கலைக்கழகத்திலை உள்ள சில பேராம்.

ஓணான்கள் சனங்களானால் எலிகூட ராசாதான்!

# எரிபொருட்களின் விலைகுறைப்பு மன்னார் மீனவர்கள், விவசாயிகள் மகிழ்ச்சி

தற்போது பதவியேற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசு முதல் தடவையாக எரிபொருட்களுக்கான விலையினை குறைத்துள்ளது.

இந்த விலை குறைப்பானது மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு பாரிய மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாச தலைவரும், வடமாகாண மீனவ கூட்டுறவு இணையத்தின் தலைவருமான என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை குறைப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசு முதற் கட்டமாக எரிபொருட்களின் விலையினை குறைப்பு செய்துள்ளமையால் மக்கள் பல வகையிலும் நன்மையடைவார்கள். பஸ் கட்டணங்களும் குறைக்கப் படும் இதனால் பயணிகளின் அசௌகரியங்களை தடுக்க முடியும். தற்போதைய காலத்தில் மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி அதிகரித்துள்ளதுடன் அதிகளவான மீன்கள் பிடிபடுகின்றன. இந்த வகையில் எரிபொருட்களின் விலை குறைப்பு மீனவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. புதிய அரசின் இந்த அதிரடி நடவடிக்கை இத்துடன் நிற்காமல் அத்தியாவசியப் பொருட்களின் விலையினையும் குறைக்க வேண்டும்.

குறிப்பாக ஏழை மீனவர்களும், விவசாயிகளும் பயன்படுத்தும் சகல வித உணவுப்பொருட்களினதும் விலை குறைக்கப்பட வேண்டும். இதனால் துன்பத்தை சுமந்த மக்கள் சந்தோசத்தை அனுபவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநோயாளர் பிரிவுக்கு புதிய கட்டடம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில முதல் முதலாக அமைக்கப்பட்ட வெளிநோயாளர்கள் பிரிவிற்கான புதிய கட்டடத் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

அனலைதீவு கலாசார ஒன்றியம் கனடா மற்றும் அனலைதீவு பிராந்திய வைத்தியசாலை புனரமைப்பு உபகுழு ஆகிய அபிவிருத்திக்குழுவினால் இரண்டு கோடி ரூபா செலவில் இந்த வைத்தியசாலை இரண்டு வருடங்கள் வேலைத்திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டு சுகாதார திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் பிரதம விருந்தினராக முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், கலந்து கொண்டு சிறப்பித்தார். (48)

# எப்படியெல்லாம் நடக்கிறது திருட்டு பொதுமக்களுக்கு அவதானம் தேவை

ஆவரங்கால் பகுதியில். பேருந்துக்காக காத்திருந்த பெண்ணிடம் களவு எடுக்க மேற்கொண்ட திருடனின் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை குறித்த பெண் பேருந்துக்காக காத்திருந்த சமயம் வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் நீங்கள் எங்கே போகப்போகிறீர்கள் என்று கேட்டதற்கு பெண்ணும் நெல்லியடி என்று கூறியுள்ளார் அதற்கு இளைஞனும் நானும் அங்கே தான் போகிறேன் வாருங்கள் இறக்கி விடுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

அதற்கு இணங்கிய பெண் இவ் இளைஞனின் மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டார்.

எனினும் இளைஞன் வல்லைச் சந்தியைக் கடந்து நெல்லியடிப் பக்கம் போகாமல் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிக்குச் சென்று கொண்டிருந்தார்.

இந்நிலையில் தான் ஏமாற்றப்படுவதை உணர்ந்த பெண் மோட்டார் சைக்கிளை விட்டு குதித்துள்ளார். இதில் பெண்ணுக்கு காயங்கள் ஏற்பட்டதுடன் இளைஞன் தப்பியோடியுள்ளான்.

காயமடைந்த பெண்ணை அப்பகுதியால் உழவு இயந்திரத்தில் வந்தவர்கள் காப்பாற்றி நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வளவு சாதுரியமாக திருடர்கள் செயற்படுகிறார்கள் என்பதை பொதுமக்கள் சிந்திக்க வேண்டியதுடன் அவதானமாக செயற்பட வேண்டும் என நெல்லியடி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (18)

# வடிகால் குப்பை அகற்றல்

நெல்லியடி நகரப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வடிகால்களினுள் காணப்பட்ட குப்பைக்கழிவுகள் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டன.

இவ்வடிகால்களினுள் குப்பை கழிவுகள் முன்னர் நிறைந்து காணப்பட்டநிலையில் இப்பகுதியால் செல்லும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டனர். அத்துடன் துர்நாற்றம் வீசி சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்டன.

மேலும் கழிவுகளை அகற்றுமாறு மக்கள் உரியதரப்பிடம் கோரிக்கை விடுத்த நிலையில் தற்போது குப்பைக்கழிவுகள் அகற்றப்பட்டன. வீதி அதிகார சபை ஊழியர்களும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை ஊழியர்களும் வடிகால்களினுள் காணப்படும் குப்பைக் கழிவுகளை அகற்றினர். (18)

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்.

- டெஸ்கார்ட்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## பிறரோடும் இணங்கி வாழ்தல்!

கிழக்கு மாகாண சபைக்கு யார் முதலமைச்சராவது என்பதில் இன்னும் இழுபறி தொடர்கிறது. 'தமிழ் பேசும் மக்கள்' என்று அலங்காரத்திற்குச் சொல்லிக் கொள்கிறோமே தவிர, ஒரே மொழியைப் பேசிக் கொள்வோரிடம் கூட இணக்கத்தைக் காண முடியாதவர்களாக இருக்கிறோம்.

தமிழர் ஒருவர் முதலமைச்சராக வருவதா முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வருவதா என்பதில் தமக்குள் இணக்கம் காண முடியாத இந்தத் 'தமிழ் பேசும் தலைவர்கள்' சிங்களத் தலைமையிடம் தனித்தனியாகச் சென்று தமக்கு நியாயத்தைச் சொல்லும்படி கோரி நிற்கிறார்கள்.

இந்த நாட்டில் பேரினவாதம் மட்டுமில்லை. எல்லாச் சமூகங்களிடமும் இனவாதம் கொழுந்து விட்டெரிவதன் அடையாளம் தான் இது. இந்தச் சூழலை இங்கு வளர்த்தெடுத்துக் கொண்டிருப்பதற்கு இந்தச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் தான் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

பிட்டும் தேங்காய்ப் பூவுமாக வாழ்ந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்ட, தமிழ்த் தலைவர்களே தங்களுடைய தலைவர்களும் என்று எண்ணியிருந்த முஸ்லிம் மக்கள் இன்று தமிழ்ச் சமூகத்தையோ தமிழ்த் தலைவர்களையோ நம்பத் தயாரில்லை.

இதற்கு பெரும்பான்மைத் தமிழ் மக்களைப் பரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தலைமைதான் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள். அவர்களோ தங்கள் தலைமைத்துவத்தின் வங்குரோத்தை மறைக்க, தமிழ் மக்களின் மனங்களைத் திரிக்க, முஸ்லிம்கள் மீதான துவேசத்தை மேலும் உமிழ்கிறார்கள்.

எப்போதுமே மற்றவர்களை விரோதிகளாக்கி, அவர்களிடமே பழியைப் போட்டு தங்களின் தலைமைத்துவத் தோல்வியை மறைத்துக் கொள்கிறார்கள் தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர். சிங்களவர்கள் சரியில்லாததால்தான் சிங்களவர்களுடன் இணக்கம் காண முடியவில்லை; முஸ்லிம்கள் சரியில்லாததால்தான் முஸ்லிம்களுடனும் இணக்கம் ஏற்பட முடியாமலிருக்கிறது என்பதற்கான காரணங்களைக் கதைகளையே தயாரித்துக் கொள்கிறார்கள்.

இப்படியே உலக சமூகங்கள் எல்லாம் நம்மை நம்ப முடியாதவர்கள் என்று கைகழுவுவதற்கான, உலகப் போக்குகளைப் புரிந்து கொள்ளாத, விட்டுக்கொடுப்புகளற்ற, ஒரு மண்டூகச் சமூகமாகக் காட்டியே இவர்கள் நம்மீது தோல்விகளைச் சுமத்தி வருகிறார்கள்.

இத்தனை காலமாகியும் தீர்வு ஏன் வரவில்லை, மற்றோர்க்கு இணையாக தமிழ்ச் சமூகம் ஏன் வேகமாக முன்னேற முடியவில்லை, நண்பர்களாக இருந்தவர்களும் ஏன் நம்மை விட்டு ஒதுங்குகிறார்கள் என்ற கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள். பதிலாக, அவர்கள் ஒருத்தரும் சரியில்லை என்ற காரணங்களும் குற்றச்சாட்டுகளுமே இவர்களிடம் இருந்து வரும்.

மற்ற எவருடனும் இணக்கம் கொள்ள முடியாத, பல்லினத் தன்மையை மதித்து வாழமுடியாத, இன்றைய உலகப் போக்கை அறிந்து அரசியல் முன்னேற்றமடையாத சமூகமாக நம்மைத் தேய விட்டுக்கொண்டிருப்பது இந்தத் தலைமைத்துவம்தான். மற்றவர்களை மறுக்கும் அல்லது மற்றையோர் பற்றிக் கவனத்தில் கொள்ளாத ஒரு தேசியத்தையே நாம் தொடர்ந்து பேசிவருகிறோம்.

மற்றொரு அடையாள மனிதர்களோடு நாம் இணைய முடியாதவர்களல்ல; நாம் வாழ்வது என்பது மற்றவர்களோடு வாழ்வதுதான். மற்றவர்களைச் சகித்துக் கொள்ளல் என்பதே நமக்குத் தேவைப்படுகிற மிக முக்கியமான மனத்தயாரிப்பு.

நமது இருப்பும் வாழ்வும் மகிழ்ச்சியும் மற்றவர்களின் இருப்பையும் மகிழ்வையும் ஏற்றுக்கொள்வதிலும், பகைக்குத் தள்ளும் வார்த்தைகளின்றி நம்மை அவர்கள் ஏற்றுக்கொள்ள வைப்பதிலும்தான் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

- ஆசிரியர்

# வித்தியாதரனிடம் விசாரணை

கடந்த காலங்களில், ஊடகவியலாளர்கள் மற்றும் முக்கிய புள்ளிகளை வெள்ளை வான்களில் கடத்திச் சென்று கொலை செய்த சம்பவங்கள் தொடர்பில்,வெள்ளை வானில் கடத்தப்பட்டு நீதிமன்றினூடாக விடுதலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் என்.வித்தியாதரனிடமிருந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக ஊடகவியலாளர் என்.வித்தியாதரன் தெரிவிக்கையில்,

தலைநகரிலிருந்து முக்கிய அமைச்சரொருவர் இவ்விடயம் தொடர்பில் என்னிடம் வினவினார். 2009ஆம் ஆண்டு பெப்ரவரியில் வெள்ளை வானில வந்தவர்களால் நான் கடத்தப்பட்டேன். அதன் பின்னர், இந்த கடத்தல் தொடர்பில் மேலிடத்துக்கு அழுத்தம் அதிகரித்ததால் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டேன். வெள்ளை வானில் கடத்தப்பட்டு உயிருடன் மீண்டவன் என்ற அடிப்படையில் அக்கடத்தல்கள் தொடர்பாக என்னிடம் விவரங்களைப் பெறவேண்டும் எனவும் அதற்கு ஒத்துழைக்குமாறும் என்னை அந்த அமைச்சர் கேட்டுக்கொண்டார். என் தரப்பு அனுபவங்களை அவர்களுக்கு வழங்கத் தயாராக இருப்பதாக நான் அவருக்குத் தெரிவித்தேன் என்று கூறினார்.

வெள்ளை வான் கடத்தல்களில் பின்னணியில் யார் யாரெல்லாம் செயற்பட்டார்கள் என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதன் முதற்கட்டமாகவே வித்தியாதரனிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது. 2009ஆம் ஆண்டு லசந்தவின் கொலைக்கு பின்னர், வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வித்தியாதரன் பேட்டி ஒன்றினை வழங்கியிருந்தார். அதில் தனக்கும் அச்சுறுத்தல் இருப்பதாகவும், கடத்தல்களின் பின்னணி தொடர்பில் ஆராயப்படவேண்டும் என்பதோடு, வீட்டிலிருந்து வருகின்ற நாங்கள் உயிருடன் மீண்டும் வீட்டுக்கு திரும்புவோமா என்பது தெரியாது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அந்தப்பேட்டியின் பின்னர், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை குறித்த வெளிநாட்டு ஊடகவியலாளர் பேட்டி எடுப்பதற்காகச் சென்றிருந்தார். அந்த ஊடகவியலாளர் கோத்தாபயவின் அலுவலக வாசலுக்கு செல்லும் போது வித்தியாதரன் கடத்தப்பட்டார். என்ற செய்தி பரபரப்பாக வெளியாகியது. இதுதொடர்பில் குறித்த வெளிநாட்டு ஊடகவியலாளர், கோத்தாவிடம் கேட்டபோது பகிரங்கமாகவே வித்தியாதரனை விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்படுத்தி திட்டித்தீர்த்தார். அவர் ஒரு தீவிரவாதி எனவும் குறிப்பிட்டார். இந்நிலையில், வித்தியாதரன் கடத்தப்பட்டதன் பின்னர் குறித்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதால், பல மணி நேரத்தின் பின்னர், வித்தியாதரன் கைது செய்யப்பட்டதாக கூறப்பட்டு, குற்றத் தடுப்பு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டார். அப்போது, குற்றத்தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுர சேனநாயக்க செயற்பட்டார். இப்பொழுது இவர் டி.ஐ.ஜி தரத்தில் இருக்கின்றார். என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியர்களின் பிரச்சினை; உடன் முறையிட வாய்ப்பு

(கொழும்பு)

ஓய்வூதியம் பெறுநர்களின் பிரச்சினைகளை முன்வைப்பதற்காக 05 புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ், ஓய்வூதியம் பெறும் சிரேஷ்ட பிரஜைகளும், அவர்களின் குடும்பத்தினரும் தாமதமின்றி சேவைகளைப் பெற்றுக்கொள்வதே இதன் முக்கிய நோக்கமென திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய கொடுப்பனவிற்கு பதிவுசெய்தல் மற்றும் மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகளை 0115 927 104 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு தெரிவிக்க முடியும்.அத்துடன், 0115 927 105, 0115 927 106 ஆகிய இலக்கங்களை அழைத்தும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊனமுற்றவர்கள், விதவைகளுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு குறித்த சிக்கல்களை 0115 920 118 மற்றும் 0115 920 403 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொண்டு முன்வைக்கலாம் என ஓய்வூதியத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது

# ஜனாதிபதியின் அதிகாரங்களை முற்றாக அகற்றக்கூடாது

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தில் சகல விடயங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதாகும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் முக்கிய சில அதிகாரங்களை அவரிடத்தில் வைத்துக் கொள்வதில் தமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லையெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை குறித்து பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இருப்பினும் 100 நாள் வேலைத்திட்டத்துடன் முடிவடையும் ஒரு தற்காலிக நடவடிக்கை என்பதனால் இவற்றைப் பெரிதுபடுத்த வேண்டிய தேவையில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறைச்சாலைக்கலகம்; விசாரணைக்கு குழு நியமனம்

வெலிக்கடை சிறைச்சாலையில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களைக் கண்டறிவதற்காக நீதியமைச்சரினால் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதி விமல் நம்புவசம் தலைமையிலான அந்தக் குழுவில், ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் அசோக்க விஜேதிலக்க மற்றும் ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் சட்டத்தரணி எஸ்.கே லியனகே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

வெலிக்கடையில் இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையை கவனத்திற்கொண்டு நீதியமைச்சர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்.

அந்த சம்பவம் தொடர்பில் கண்டறிவதற்காக கடந்தகாலங்களில் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அதன் அறிக்கை சம்பவத்தில் பொறுப்பு கூறவேண்டியவர்கள் தொடர்பில் தகவல் வெளிவராதவண்ணம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

2012 ஆம் ஆண்டு வெலிக்கடையில் இடம்பெற்ற மோதலில் 27 கைதிகள் உயிரிழந்திருந்ததுடன், 20இற்கும் அதிகமான கைதிகளும், விசேட அதிரடிப்படையினரும் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், இந்தச் சம்பவத்தினால் வெலிக்கடை சிறைச்சாலையின் சொத்துக்களுக்கும் சேதமேற்பட்டிருந்தது.

# மைத்திரி அனுதாபம்

சவூதி மன்னரான அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸின் மறைவு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சவுதி அரேபிய தூதரகத்துக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தூதுவரிடம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டதுடன் அங்கு வைக்கப்பட்டிருந்த அனுதாபம் தெரிவிக்கும் புத்தகத்திலும் ஜனாதிபதி கையெழுத்திட்டார். ஜனாதிபதியுடன் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் சென்றிருந்தார்.

# இனப்பிரச்சினையின் தீர்வை கூட்டமைப்பு இப்போதும் விரும்பவில்லை

**சங்கர சிவன்**

அரசாங்கத்தின் இப்போதைய செயற்பாடு நூறு நாள் வேலைத் திட்டத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. நூறு நாள் வேலைத் திட்டம் விரைவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலையே பெருமளவில் இலக்காகக் கொண்டிருக்கின்றது. இன்றைய ஆட்சியாளர்கள் எதிரணியில் இருந்தபோது என்னென்ன விடயங்கள் மக்களுக்குப் பாதகமானவை என்றும் ஜனநாயக விரோதமானவை என்றும் பிரசாரம் செய்தார்களோ அவற்றுக்கான தீர்வுகளே பெரும்பாலும் நூறு நாள் வேலைத் திட்டத்தில் அடங்குகின்றன. இனப்பிரச்சினை பற்றியோ தமிழ் மக்களின் மற்றைய பிரச்சினைகள் பற்றியோ இதில் எதுவும் சொல்லப்படவில்லை. இந்த வேலைத் திட்டத்துக்கு அப்பால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளும் தேர்தலையே பிரதான இலக்காகக் கொண்டவை. முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல்கள் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகள் பற்றிய நடவடிக்கைகளையும் வடபகுதிக்கான பிரயாணக் கட்டுப்பாடு மற்றும் படையினர் வசமுள்ள காணிகள் போன்ற விடயங்கள் தொடர்பாக விடுக்கப்பட்ட பணிப்புரைகளையும் உதாரணமாகக் கூறலாம்.

நூறு நாள் வேலைத் திட்டத்தில் தமிழ் மக்களின் விசேடமான பிரச்சினைகளுக்குத் தீர்வு எதுவும் இல்லாத போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குகின்றது. கொஞ்சக் காலமாகவே கூட்டமைப்புக்குள் அடிக்கடி பிரச்சினை கிளப்பும் சுரேஷ் பிரேமச்சந்திரன் நூறு நாள் வேலைத் திட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு ஏன் இல்லை என்ற கேள்வியைப் போடுகின்றார். நூறு நாள் வேலைத் திட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லை என்பதையும் மைத்திரிபால சிறிசேனவோ அந்த அணியின் மற்றைய தலைவர்களோ இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி வெளிப்படையாக எதுவும் கூறத் தயாராக இருக்கவில்லை என்பதையும் தெரிந்துகொண்டு தான் மைத்திரிபாலவுக்கு ஆதரவளிப்பதெனக் கூட்டமைப்பு தீர்மானித்தது. கூட்டமைப்பின் இந்த முடிவு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக உள்ளதா அல்லது அவ்விடயத்தைத் தந்திரமாகத் தள்ளிப் போடுவதாக உள்ளதா என்பது பற்றிப் பின்னால் பார்ப்போம்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் மக்களின் நலனுக்காக இக்கேள்வியை எழுப்புகின்றாரா அல்லது தமிழரசுக் கட்சி மீது வஞ்சம் தீர்ப்பதற்காக எழுப்புகின்றாரா என்பது ஒரு திறந்த கேள்வி. பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளராக உள்ளபோதிலும் மெய் நடப்பில் சுமந்திரனே பேச்சாளராகச் செயற்படுகின்றார். தமிழரசுக் கட்சி சுமந்திரனை வைத்துத் தன்னை ஓரங்கட்டுகின்றது என்று சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு ஆதங்கம். தனது சகோதரன் சர்வேஸ்வரனுக்கு மாகாண அமைச்சர் பதவி வழங்காதது தமிழரசுக் கட்சியின் சதி என்று இப்போதும் அவர் கருதுகின்றார். கூட்டமைப்பு பற்றிப் பேசுவதனால் பத்திரிகையாளர்களை அழைத்துப் பல விடயங்களைத் தன்னால் கூற முடியும் என்று சர்வேஸ்வரனும் தன் பங்குக்கு அண்மைய வடமாகாண சபை அமர்வின் போது ஒரு போடு போட்டிருக்கின்றார். பிரேமச்சந்திரன் இப்படியான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருப்பாரேயொழிய அதற்கு மேல் ஒருபோதும் போக மாட்டார். குறைந்தது அனந்தி சசிதரன் மேற்கொண்ட நிலைப்பாட்டின் அளவுக்குக்கூடச் செல்லமாட்டார். அவர் பூனைக்கு நல்ல தோழன். அதேநேரம் பாலுக்கும் விசுவாசமான காவலாளி.



எவ்வாறாயினும் சுரேஷ் எழுப்பிய பிரச்சினை வேறொரு கோணத்தில் முக்கியமானது. நூறு நாள் வேலைத் திட்டத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வோ தமிழ் மக்களின் மற்றைய பிரச்சினைகளுக்கான தீர்வோ இல்லையென்பதால் பொதுத் தேர்தலின் பின் அமையும் அரசாங்கம் தான் இனப்பிரச்சினை விடயத்தைக் கையாள வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றாக நின்றவர்கள் பொதுத் தேர்தலில் தனித் தனியாகக் களமிறங்கப் போகின்றார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிரெதிராகப் போட்டியிடப் போகின்றன. இந்த இரண்டு கட்சிகளுள் ஒன்று தான் ஆட்சி அமைக்கும். இதில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? எந்தக் கட்சியின் அரசாங்கம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூட்டமைப்பு நம்புகின்றது? அல்லது இரண்டுமே தீர்வுக்குச் சாதகமான கட்சிகள் என்றும் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் அதனுடன் பேசித் தீர்வைப் பெறலாம் என்றும் நம்புகின்றார்களா?

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குக் கூடுதலான சுயாட்சி வழங்கப்படும் என்று ரணில் கூறியதாக அவரைப் பேட்டி கண்ட பின் என்.டி.ரி.வி. தொலைக்காட்சி சேவை செய்தி வெளியிட்டது. அது திரிபுபடுத்தப்பட்ட செய்தி என்றும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாகவே கூறியதாகவும் ரணில் விளக்கம் அளித்திருக்கின்றார். அவருடைய அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்லப்போவதில்லை என்பது தெளிவாகின்றது. 2015இல் தீர்வு நிச்சயம் என்பது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கீழ் பொய்யாகிவிடும்.

சந்திரிகா தனக்கு ஏதோ வாக்குறுதி தந்திருப்பதாகச் சம்பந்தன் கூறினார். அது என்ன வாக்குறுதி என்பது தமிழ் மக்களுக்குத் தெரியாத மூடு மந்திரமாகவே இருக்கின்றது. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் முன்வைக்குமா? அதைப் பற்றிச் சந்திரிகாவோ அவரது தரப்பிலுள்ள மற்றவர்களோ பேசுவதாகக் காணோம்.


எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் கட்சியுடன் பேசித் தீர்வைப் பெறலாம் என்ற கூட்டமைப்பின் நிலைப்பாடு இணக்க அரசியல் பாதை. கூட்டமைப்பு எதிர்ப்பு அரசியலிலும் அந்தலைக்கே சென்றது. இப்போது இணக்க அரசியலிலும் அந்தலைக்கே செல்கின்றது. அடிப்படையான விடயங்களில் சொந்த ஆலோசனையை வெளிப்படுத்தாமல் அரசாங்கத்துடன் பேசுவது இணக்க அரசியலாகாது. அது அரசாங்கம் எதைத் தந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கே இட்டுச் செல்லும். முக்கியமான விடயங்களில் கொள்கை நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்திக் கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படுவது தான் உண்மையான இணக்க அரசியல்.

**முழுமையான அரசியல் தீர்வை ஒரே தடவையில் பெறுவது சாத்தியமற்றதான இன்றைய நிலையில் பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றுக் கொள்வது அரசியல் தீர்வை நோக்கிய இணக்க அரசியலை முன்னோக்கி நகர்த்துவதற்கு அவசியமானது. இதில் முரண்பாடு இருக்குமேயானால் இணக்க அரசியலை முன்னெடுப்பது சாத்தியப்படாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகவாவது இன்னும் வெளிப்படையாக ஏற்கவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்குப் புறம்பான நிலையிலேயே கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கின்றது என்பதையே இந்த நிலைப்பாடு புலப்படுத்துகின்றது.**

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனக் கூறும் ஹெல உறுமய போன்ற பேரினவாதக் கட்சிகளைத் தவிர, தென்னிலங்கையை மையமாகக் கொண்ட மற்றைய கட்சிகள் பதின்மூன்றாவது திருத்தத்தை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகவே பார்க்கின்றன. முழுமையான அரசியல் தீர்வா அல்லது அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமா என்ற கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வாகவே அவை பார்க்கின்றன. அரசியல் தீர்வை இலக்காகக் கொண்ட இணக்க அரசியலில் இது ஒரு முக்கிய அம்சம். முழுமையான அரசியல் தீர்வை ஒரே தடவையில் பெறுவது சாத்தியமற்றதான இன்றைய நிலையில் பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றுக் கொள்வது அரசியல் தீர்வை நோக்கிய இணக்க அரசியலை முன்னோக்கி நகர்த்துவதற்கு அவசியமானது. இதில் முரண்பாடு இருக்குமேயானால் இணக்க அரசியலை முன்னெடுப்பது சாத்தியப்படாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதின்மூன்றாவது திருத்தத்தை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகவாவது இன்னும் வெளிப்படையாக ஏற்கவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்குப் புறம்பான நிலையிலேயே கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கின்றது என்பதையே இந்த நிலைப்பாடு புலப்படுத்துகின்றது.

பிளவுபடாத இலங்கையில் நடைமுறைச் சாத்தியமானதும் நீடித்து நிலைக்கக் கூடியதுமான தீர்வை நாடி நிற்பதாகக் கூட்டமைப்புத் தலைமை அடிக்கடி கூறுகின்றபோதிலும் அவ்வாறானதொரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க விரும்பவில்லை. இது அரசியல் தீர்வுக்குச் சாதகமான அணுகுமுறையாகாது. ஆட்சியாளர்களுடன் எவ்வளவு தான் நேச உறவு இருப்பினும் அரசியல் தீர்வுக்குச் சிங்கள மக்களின் பங்களிப்பு அத்தியாவசியமானது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ்த் தலைமை பிரிவினைப் பாதையில் சில காலம் பயணித்ததால் அதைப் பிரிவினைச் சக்தியாகவே இன்று வரை சிங்கள மக்கள் பார்க்கின்றார்கள். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுக்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பது இரண்டு வகையில் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு அவசியமானது. ஒரு புறத்தில் தமிழ்த் தலைவர்களின் அரசியல் தீர்வுக் கோரிக்கையைப் பிரிவினை முயற்சியாகச் சிங்கள மக்கள் பார்க்கும் நிலை நீங்கிச் சர்வசன வாக்கெடுப்பில் அவர்களின் ஆதரவைப் பெறுவதற்குச் சாதகமான சூழ்நிலை உருவாகும். மறுபுறத்தில் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வுக் கோரிக்கையை வலியுறுத்துவதற்குத் தீர்வு திட்டம் அவசியமாகின்றது.

தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்குக் கூட்டமைப்பு முன்வரவில்லையென்றால் அரசியல் தீர்வில் அதற்கு அக்கறை இல்லையென்று அர்த்தமாகின்றது. படையினர் வசமுள்ள காணிகள், மீள் குடியேற்றம், விசாரணையின்றிச் சிறையில் இருப்பவர்கள் போன்ற விடயங்களில் சில தீர்வுகளைப் பெற்றுக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வைப் புறந்தள்ளும் வழமையான அரசியலையே கூட்டமைப்பின் இப்போதும் பின்பற்றுகின்றது என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.



## ரஷ்ய ரென்னிஸ் மங்கை மாரடைப்பால் மரணம்

(மொஸ்கோ)

ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை வைலட்டா டெஜிடிரேவா பயிற்சி செய்து கொண்டிருக்கும் போது திடீரென மாரடைப்பால் இறந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவில் உள்ள ரோஸ்டோவ் நகரில் பிறந்த வைலட்டா டெஜிடிரேவா, உலக அளவில் ரென்னிஸ் வீரர்கள் வரிசை பட்டியலில் 1084ஆவது இடத்திலுள்ளார். இறுதியாக துருக்கியில் நடைபெற்ற காலிறுதி சுற்றில் இவர் கலந்து கொண்டார்.

வளர்ந்து வரும் இளம் வீராங்கனையான வைலட்டா டெஜிடிரேவா, தனது அபார ஆட்டத்தால் இவரது விளையாட்டு திறமை படிப்படியாக உலகிற்கு தெரிய வந்து கொண்டிருந்தது. எனவே, அவர் பிரபல வீராங்கனை, அன்னா குர்னிகோவா போன்றுவருவார் என்று ரஷ்ய ஊடகங்கள் கொண்டாடின. இந்நிலையில், பயிற்சியின்போது டெஜிடி ரேவா மரணம் அடைந்துள்ளார்.

இவரது மரணம் குறித்து அவரின் நெருங்கிய சக ரென்னிஸ் வீராங்கனையான அனஸ்டாசியா அவரது பேஸ்புக்கில் இதனைத்தெரிவித்துள்ளார். அதில், வைலட்டா டெஜிடிரேவா மரணம் என்னால் நம்பமுடியவில்லை. இருப்பினும் அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன் என்று இரங்கல் தெரிவித்துள்ளார்.

# நான்காவது சுற்றில் செரீனா

(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஒப்பன் ரென்னிஸ் தொடரின் நான்காவது சுற்று உலகின் முதல் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஒப்பன் ரென்னிஸ் போட்டித் தொடர் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டி ஒன்றில் உலகின் முதல் நிலை வீராங்கனையும், அவுஸ்ரேலிய ஒப்பன் பட்டத்தை ஐந்து முறை வென்றவருமான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 3ஆவது சுற்றில் உக்ரைனை சேர்ந்த எலினாவை எதிர் கொண்டார்.


இதில் செரீனா 406, 6-2, 6-0 என்ற செட் கணக்கில் வென்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார். இந்த சுற்றில் அவர் 24ஆம் நிலை வீராங்கனை கார்பினை (ஸ்பெயின்) சந்திக்கிறார்.

6ஆம் நிலை வீராங்கனை ரட்வன்ஸ்கா (போலந்து) 6-0, 7-5 என்ற நேர்செட் கணக்கில் லெப்சென்கோவை (அமெரிக்கா) தோற்கடித்தார். ரட்வன் ஸ்கா 4ஆவது சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த வீனஸ் வில்லியம்சை எதிர் கொள்கிறார்.

வீனஸ் 3ஆவது சுற்றில் இத்தாலி வீராங்கனை கேமிலாவை 4-6, 7-6 (7-3), 6-1 என்ற கணக்கில் வென்றார்.

11ஆம் நிலை வீராங்கனை சிபுல்கோவா (சுலோவாக்கியா) 7-5, 6-2 என்ற கணக்கில் கோர்னெட்டை (பிரான்ஸ்) வீழ்த்தினார். அவர் 4ஆவது சுற்றில் அசரென்கா (பெலராஸ்) அல்லது ஸ்டைர் கோவாவை (செக்குடியரசு) சந்திக்கிறார்.

8ஆம் நிலை வீரர் ரோனிக் (கனடா) 6-4, 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் ஜேர்மனியை சேர்ந்த பெஞ்சமின் பெக்கரை எளிதில் வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.



# ஹோலியை நம்பி இந்தியா



(மும்பை)

இதற்கிடையே இந்திய அணி உலக கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் ஹோலியை தான் அதிகமாக நம்பி உள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிக்கும், ஒருநாள் போட்டிக்கும் அதிக வேறுபாடு இருக்கிறது. ஒருநாள் போட்டியை பொறுத்த வரை இந்திய அணி அனுபவம் வாய்ந்தது. இந்திய அணிக்கு பந்து வீச்சே மிகப்பெரிய சவாலாக உள்ளது.

ஹோலியை அதிகமாக இந்திய அணி நம்பியுள்ளது. இதனால் அவர் சிறப்பாகத் துடுப்பாட வேண்டும். நடு வரிசை ஓவரில் அவர் நன்றாக ஆடினால் ரெய்னாவும், டோனியும் சிறப்பாக நிறைவு செய்வார்கள்.

இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் எப்போதுமே இரு அணிகளுக்கும் நெருக்கடியாக இருக்கும். பாகிஸ்தானை விட இந்தியாவுக்கு அதிகமான இரசிகர்களின் ஆதரவு இருக்கும். இதனால் இந்தியாவுக்கு கூடுதலாக நெருக்கடி இருக்கும் என் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தென்னாபிரிக்க அணியின் முன்னாள் கப்டன் ஸ்மித் ஹோலி குறித்து கருத்துத் தெரிவிக்கையில், ஹோலி மிக அற்புதமான வீரர். வேகப்பந்து, சுழற்பந்து இரண்டிலும் அபாரமாக விளையாடக்கூடியவர். இது தான் அவரது சாதகமான நிலை. அவரை நம்பியே இந்திய அணி இருக்கின்றது என்பது வெளிப்படை. ஒரு வகையில் இது ஹோலிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கின்றேன். டோனியின் தலைமை தான் இந்திய அணியின் பலம். எப்போதுமே அவர் சிறப்பாக விளையாடக்கூடியவர் என்றார்.

இதேபோன்று கபில்தேவும் கருத்து வெளியிட்டுள்ளார். ஹோலி சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் இந்திய அணியால் சாதிக்க முடியும் என கபில் குறிப்பிட்டுள்ளார்.




## அறிமுக கப்டனாக சதம் ஸ்ரீபன் ஸ்மித் சாதனை

கப்டனாக அறிமுகமான முதல் ஒரு நாள் போட்டியில் சதம் விளாசியோர் பட்டியலில் அவுஸ்ரேலியாவின் ஸ்ரீபன் ஸ்மித் இணைத்துள்ளார்.

தாமதமாக பந்து வீசிய புகாரில் அவுஸ்ரேலிய கப்டன் ஜோர்ஜ் பெய்லிக்கு ஒரு ஆட்டத்தில் விளையாட தடை விதிக்கப்பட்டதால், இங்கிலாந்து அணிக்கெதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்ரேலிய அணியை 25 வயதான ஸ்ரீவன் ஸ்மித் வழி நடத்தினார். இதன் மூலம் அவர் அவுஸ்ரேலியாவின் 22ஆவது ஒரு நாள் போட்டி அணியின் கப்டன் என்ற சிறப்பைப் பெற்றார். கப்டனாக அறிமுகமான முதல் ஒரு நாள் போட்டியிலேயே சதம் அடித்த கிளைன் டர்னர் (நியூசிலாந்து), ரிச்சி ரிச்சர்ட்சன் (மே.தீவுகள்), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), சனத் ஜெயசூர்யா (இலங்கை), கெவின் ஹமில்டன் (ஸ்கொட்லாந்து), மைக் ஹஸி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் வரிசையில் இணைந்துள்ள ஸ்ரீபன் ஸ்மித் இன்னொரு வகையில் வரலாறும் படைத்துள்ளார். அதாவது அவர் ஏற்கனவே பிறிஸ்பேனில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் கப்டனாக அறிமுகமாகி அந்தப் போட்டியில் 133 ஓட்டங்கள் விளாசினார். இதன் மூலம் ஒரு நாள் போட்டி மற்றும் டெஸ்ட் இரண்டிலும் கப்டனாக அடியெடுத்து வைத்த முதல் ஆட்டத்திலேயே சதம் அடித்த ஒரே வீரர் என்ற அரிய மகிமையை பெற்றிருக்கிறார்.

# தொடரும் காதல் மன்னனின் ஜாலம்






பிரேசில் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் நெய்மர். இவரது புதிய காதலியான எலிசபெத் மோர்ட்டினஸ், அவரை விட மூத்தவர். என்று பிரேசில் பக்கமிருந்து வரும் தகவல்கள் பரபரக்கின்றன.

எப்போதும் புகழ் மழையிலும், பண மழையிலும் குளிக்கும் நட்சத்திர விளையாட்டு வீரர்கள் காதல் விளையாட்டுகளிலும் பெயர் பெறுவது வழக்கம். அப்படி நெய்மரும் ஒரு காதல் மன்னனாகவே திகழ்கிறார்.

இவர் ஏற்கனவே பிரேசில் நடிகை புருனா மார்குயிஜின், மருத்துவக் கல்லூரி மாணவி கமில்லா, பாட்ரிகா ஜோர்டன், கேபிரியலா, சொரஜா என பல பெண்களுடன் பழகினார். அவர்களுடன் நெய்மர் சுற்றும் தகவலும், படங்களும் சுடச்சுட, வெளியாகி கால்பந்து இரசிகர்களின் கவனத்தை ஈர்த்தபடி இருந்தன.

இந்நிலையில் நெய்மர் புதிதாக, தன்னைவிட 4 வயது மூத்த, ஸ்பெயின் பார்சிலோனாவைச் சேர்ந்த எலிசபெத் மோர்டினசுடன் நெருக்கமாகப் பழகி வருகிறார்.

எலிசபெத், கடந்த இரு ஆண்டுகளாக வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறார். இன்ஸ்டாகிராம் சமூக வலைதளத்தின் மூலமாகத் தான் இவர்களுக்கு இடையில் தொடர்பு ஏற்பட்டதாம். அந்தத் தொடர்பு நெருக்கமான பழக்கமாகி, தற்போது இருவரும் பார்சிலோனாவில் உள்ள பிரபல இரவு விடுதிகளில் அடிக்கடி சந்தித்து வருகிறார்களாம். இப்படி ஒரு பக்கம் தகவல்கள் வந்துகொண்டிருந்தாலும், நெய்மரோ, அவரது புதிய காதலியோ தங்கள் பழக்கத்தை உறுதிப்படுத்தும் செய்தி எதையும் வெளியிடவில்லை. ஆனால் டுவீட்டரில் நெய்மர் சமீபத்தில் வெளியிட்ட செய்தியில், என்னுடன் எத்தனையோ பெண்களை தொடர்புபடுத்திப் பேசுகிறார்கள். எனக்கு இத்தனை பெண்களுடன் தொடர்பு உள்ளதாக வெளியாகும் செய்தியெல்லாம் உண்மை என்றால், நான் 10 பெண்களுடன்தான் வாழ வேண்டும் என்று கூறியுள்ளார். அதேநேரம், நெருப்பில்லாமல் புகையுமா? என்றும் சிலர் கேட்கிறார்கள்.

# இறுதிப் போட்டிக்கு முன்னேறுவோம்

இறுதிப் போட்டியில் ஆடும் வாய்ப்பு எங்களைவிட்டு கைநழுவவில்லை. இந்திய அணியை மீண்டும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறுவோம் என இங்கிலாந்து அணிக் கப்டன் இயன் மோர்கன் தெரிவித்துள்ளார். அவுஸ்ரேலிய அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் தோல்வியடைந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலே மோர்கன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இயன் பெல்லின் துடுப்பாட்டம் பிரமாதமாக இருந்தது. ஆனால் கடைசி 10 ஓவர்களில் சிறப்பாக விளையாட தவறிவிட்டோம். இறுதிக்கட்டத்தில் எப்படி பந்து வீச வேண்டும் என்பதை செய்து காட்டிய அவுஸ்ரேலிய பந்து வீச்சாளர்களையே எல்லா பெருமையும் சாரும். 303 ஓட்டங்கள் என்பது சவாலான ஓட்ட எண்ணிக்கை தான். ஆனால் அவர்கள் மட்டும் கடைசி நேரத்தில் நன்றாக பந்து வீசாமல் இருந்திருந்தால் நாங்கள் 340 முதல் 350 ஓட்டங்கள் வரை எடுத்திருப்போம். வெற்றியும் பெற்றிருப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெற்றி குறித்து அவுஸ்ரேலிய கப்டன் ஸ்ரீவன் ஸ்மித் குறிப்பிடுகையில், கடைசி 20 ஓவர்களில் இங்கிலாந்தின் ஓட்ட வேகத்தை வெகுவாக கட்டுப்படுத்திய பந்து வீச்சாளர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள்.

எங்களது பந்து வீச்சாளர்கள் இறுதி கட்டத்தில் எப்படி பந்து வீச வேண்டும் என்று திட்டமிட்டு செயற்பட்டனர். உலகக் கோப்பை வரை இதே போன்று செயற்படுவார்கள் என்று நம்புகிறேன். மீண்டும் ஒரு முறை ஓட்டங்கள் குவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த சீசனை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன் என்றார்.



# புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம்

# 32 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மாயவனூரில் புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளிடம் வடக்கு மாகாண முதல்வர் க.வி. விக்னேஸ்வரனால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கையளிக்கப் பட்டுள்ளது.

மாயவனூர் பகுதி மக்கள் குடிப்பதற்கும் விவசாயத்துக்கும் தாம் நீரின்றி அவலப்படுவதாக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

இதையடுத்து, விவசாய அமைச்சின் 2014ஆம் ஆண்டுக்குரிய மாகாணக் குறித்தொதுக்கப் பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து 32 மில்லியன் ரூபா நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு ஒதுகீடு செய்யப்பட்டு புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் உருவாக்கப்பட்டது.

கடந்த யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கட்டுமானப்பணிகள் தற்போது முடிவடைந்த நிலையில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் நீரைப்பயன்படுத்தி 100 விவசாயிகள் தலா ஒரு ஏக்கர் வீதம் 100 ஏக்கர்களில் மேட்டுநிலப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கேற்ப, 100 பயனாளிகளுக்கு விவசாயத் திணைக்களத்தால் பல்வேறு பயிர்களின் விதைகள் அடங்கிய பொதிகளும், பழமரக்கன்றுகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு, நீண்டகாலம் கைவிடப்பட்டதால் பற்றைகளால் மூடப்பட்டிருக்கும் காணிகளைத் துப்புரவு செய்து பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு வசதியாக பயனாளிகள் அனைவருக்கும் நீர்வேலியில் உருவாக்கப்பட்ட தரமான கத்திகளும் வழங்கப் பட்டுள்ளன.

இதுவரைகாலமும் புழுதி மண்டலமாகக் காட்சியளித்த மாயவனூரில் வாய்க்கால்களின் ஊடாக நீர் பொங்கிப்பாய் வதைக் காண்பதற்காக ஏராளமான மாயவனூர் மக்கள் மகிழ்சசி பொங்கக் கூடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (160)

# களவாக தேங்காய் பிடுங்கிய இளைஞன் விளக்கமறியலில்

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டைவேலி கிராம அலுவலர் காரியாலயம் அமைந்த காணியில் களவாக தேங்காய் பிடுங்கிய இளைஞனை பொலிஸார் கையும்மெய்யுமாகப் பிடித்துள்ளனர்.

குறித் காணியில் இளைஞன் களவாக தேங்காய் பிடிங்கிக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த கிராம அலுவலர் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து குறித்த இளைஞனை கைது செய்ததுடன் பருத்தித்துறை நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இதன்போது குறித்த நபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார். (18)



எழுவைதீவைச் சேர்ந்த கனடா வாழ் அடியவரால் எழுவைதீவு சடைவைரவர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது. அதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் அண்மையில் குரு மார்களினால் மேற்கொள்ளப்பட்டன. (90)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி செனப்புலவு உமையாள் வித்தியாலய 163 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

செனப்புலவு உமையாள் வித்தியாலய பாடசாலை அதிபர் தி.அரவிந்தன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற. நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் ஏற்பாட்டில் இப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன. (40)



கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலையில் தரம் 1 இல் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது.... (90,48)

# மன்னார் பொது சேவைகள் கழகம் வரி செலுத்தாததால் மூடப்பட்டுள்ளது

(மன்னார்)

மன்னார் அரச சேவையாளர் பொது சேவைகள் கழகம் வரி செலுத்தப்படாமல் இழுத்து மூடப்பட்டுள்ளதாக குறித்த பொது சேவைகள் கழக உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு வருட காலமாக சீராக இயங்கி வந்த பொது சேவைகள் கழகம் திடீர் என கடந்த முதலாம் திகதி முதல் இழுத்து மூடப்பட்டுள்ளமையினால் அங்கத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் அரச பொது சேவைகள் கழகச் செயலாளர் தெரிவித்துள்ளதாவது,

குறித்த பொது சேவைகள் கழகம் கடந்த பல வருடங்களாக மதுபான சாலையாகவே இயங்கி வந்தது. தற்பொழுது எமது அரசாங்க அதிபரின் தலையீட்டினால் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு மன்னார் அரச சேவையாளர் பொது சேவைகள் கழகம் புதிய நிர்வாகத்தினால் சிறப்பாக இயக்கப்பட்டு வந்தது.

இருப்பினும் கடந்த நிர்வாக காலத்தில் பொது சேவைகள் கழகத்தின் செயலாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற கிராம அலுவலர் ஜே.ஜே.மிராண்டா தனது காலப்பகுதியான 2013 மார்ச் மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் சுமார் 55 மில்லியன் ரூபா பெறுமதியான மதுபானங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்துள்ளார்.

கொள்வனவு செய்யப்பட்ட 55 மில்லியன் ரூபா பெறுமதியான மதுபானங்களுக்கான வருமான வரியும், பெறுமதி சேர் வரியும் செலுத்தாமையினால் இவ் வருடத்திற்குரிய உரிமத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்க அதிபருக்கு தெரியப்படுத்தியதுடன் மன்னார் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் முன்னால் செயலாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்

(25.01.2015 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் தை மாதம் 11 ஆம் திகதி.
பஞ்சமி / அரிர்தம் / கரிநாள்
உத்தர நட்சத்திரம் மு.இ.06.55 வரை. பின் ரேவதி.
இராகு காலம 05.06 - 06.36 வரை. சுபநேரம 09.36 - 11.06 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
அட்டமத்துச் சனி இருப்பதினால் புதிய முயற்சியில் ஈடுபட விரும்பாமை.

**ரிஷபம்**
கொடுத்த கடனில் ஒருபகுதி முறைப்பாட்டினால் கைக்கெட்டல்.

**மிதுனம்**
பரீட்சை சித்தியினால் வெளியூர் மணமகனை சென்றடைய யோகங்கிட்டுதல்.

**கடகம்**
புதியீன கொள்வனவு செய்கையில் நம்பகத்தில் விழிப்பாக இருத்தல்.

**சிம்மம்**
சுபகாரியமொன்று எதிர்பாராது ஏற்பட்ட செய்தி அறிதல்.

**கன்னி**
மழக்கனனி மூலம் பொருத்தமான மணமகனை தேடுதல்.

**துலாம்**
வேலைப்பளுவினால் தேக நலம் பாதிப்பு ஏற்படல்.

**விருச்சிகம்**
ஒன்பதில் குரு நிற்பதினால் வெளியூர் பயணம் பற்றிய செய்தி வந்தடைதல்.

**தனுசு**
மனையாளின் சொல்கேட்டதினால் வரவிருந்த மோசடி அற்றுப்போதல்.

**மகரம்**
மாமன்மாருடன்சுமுக உறவினைப் பேணியதால் நன்மை கிட்டுதல்.

**கும்பம்**
தொலைபேசி மூலம் நிலுவைகள் பெற ஆவன செய்தல்.

**மீனம்**
சொத்துப் பிரச்சினை பிதாவின் கருணையால் சமரசம் ஏற்படல்.



# செல்வம் நிறைந்த மாபெரும்

அறுவடையை

பெறுவதற்கு தயாராகுங்கள்

நாளைய

## கொவிசெத மூலம்

# 657

# இலட்சம்

## தாண்டிய மாபெரும் பரிசு பொதி

இன்றே கொவிசெத லொத்தரினை

அதிக அதிகமாக கொள்வனவு செய்யுங்கள்

NLB அதிர்ஷ்டத்தின் ஒரே பெயர்

**தேசிய லொத்தர் சபை**

(C/3806)

# கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்கு மாணவர்களின் வீதம் அதிகரிப்பு

## துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

துணுக்காய் கல்வி வலயத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கற்கின்ற மாணவர்களின் வீதத்தினை அதிகரிக்கவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. லூட்ஸ் மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பாடசாலைகளின் நிலவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சை, கடந்தாண்டு க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை, க.பொ.த.உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் கடந்தாண்டுகளை விட உயர்வடைந்துள்ளன. உதாரணமாக புலமைப்பரிசில் பரீட்சையில் 44 பிள்ளைகள் வெட்டுப் புள்ளியினை தாண்டி சித்தியடைந்துள்ளார்கள். பரீட்சைக்குத் தோற்றிய 640 பிள்ளைகளில் 250 பிள்ளைகள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் சித்திவீதம் 36 வீதமாக இருந்து 46 வீதமாக உயர்ந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலேயே மருத்துவபீடத்திற்கான முதலாவது இடம், மூன்றாம் இடம், ஐந்தாம் இடம் மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்கள் பெற்றுள்ளார்கள். கலைப்பிரிவில் 156 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 128 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றுள்ளார்கள்.

கடந்தாண்டுகளை விட க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் அதிகரித்துள்ளன. தரம் 5 மாணவர்கள் 100 புள்ளிகளுக்குக் குறைவாக எடுக்கக்கூடாது என்பதற்காக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவித்துவருகின்றோம். ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்ததன்படி க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் கணித, விஞ்ஞானப்பிரிவில் தோற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையினை 40வீதமாக அதிகரிக்கப்படவேண்டும். அதேபோன்று கலைப்பிரிவின் வீதத்தைக்குறைக்க வேண்டும். கலைப்பிரிவு 60வீதமாகவும், வர்த்தகம், கணித, விஞ்ஞானப் பிரிவுகள் 20 வீதமாகவும் உள்ளன. கணித, விஞ்ஞானப் பிரிவுகளை அதிகரிக்க வேண்டும் அதனடிப்படையில் எமது வலயத்தில் 07 பாடசாலைகளில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பித்துள்ளோம் என்றார்.

மாந்தைகிழக்கில் இரு பாடசாலைகளிலும், துணுக்காயில் இருபாடசாலைகளிலும், ஒட்டுசுட்டானில் மூன்று பாடசாலைகளிலும் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாந்தைகிழக்கில் பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், பாலிநகர் மகாவித்தியாலயம், துணுக்காயில் மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகா வித்தியாலயம், ஒட்டுசுட்டானில் மாங்குளம் மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், முத்தையன்கட்டு வலதுகரை மகா வித்தியாலயம் ஆகிய ஏழு பாடசாலைகளிலும் விஞ்ஞானப் பாடங்களுக்கான ஆய்வு கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆளணிப்பற்றாக்குறை நிறைவு செய்யப்பட்டுள்ளன. பாலி நகர் மகாவித்தியாலயத்தைத் தவிர ஏனைய ஆறு பாடசாலைகளிலும் கணித, விஞ்ஞானப் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டு பாலிநகர் மகா வித்தியாலயத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதேவேளை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும், மல்லாவி மத்திய கல்லூரியிலும் தொழில்நுட்பக் கற்கைப் பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாண்டு ஒட்டுசுட்டானிலிருந்து 19 மாணவர்கள் தொழில்நுட்பப் பாடத்திற்குத் தோற்றுவார்கள் எனவும் தெரிவித்தார். (160)



## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

ஜேர்மனியில் இயங்கும் அனலைதீவு ஆச்சிதுணை அருளகத்தின் ஊடாக யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்களுக்கு எழுவைதீவைச் சேர்ந்த ஜேர்மனியில் வசிக்கும் திரு.திருமதி. ஜெகநாதன் ஜெயகலா மற்றும் கனடாவில் வசிக்கும் கந்தையா குணம் ஆகியோரினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (90)

## கலந்துரையாடல்

யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டம் பெற்ற உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டம் பெற்ற அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (85)

# பசு வதைக்கு எதிரான இந்து எழுச்சிப் பேரணி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து ஸ்வயம் சேவா சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பசு வதைக்கெதிரான இந்து எழுச்சிப் பேரணி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இப்பேரணி கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சுன்னாகம் - அம்பனை ஞானவைரவர் ஆலய முன்றிலிலிருந்து ஆரம்பமாகி சுன்னாகம் கதிரைமலைச் சிவன் ஆலயத்தை வந்தடைந்தது.

இணுவில், ஏழாலை, மல்லாகம், சுன்னாகம், அம்பனை முதலான இடங்களிலிருந்து வருகை தந்த பல நூற்றுக் கணக்கான மக்கள் இப்பேரணியில் கலந்து கொண்டு தங்கள் இந்து சமய உணர்வினை வெளிக்காட்டியிருந்தனர்.

பேரணியில் கலந்து கொண்ட இந்து மக்கள், கொல்லாதே! கொல்லாதே! பசுவைக் கொல்லாதே!, இந்துவாக வாழ்வோம் இந்து தர்மம் காப்போம், வேண்டாம் வேண்டாம் மதமாற்றம் வேண்டாம் போன்ற கோஷங்களை உணர்வுபூர்வமாக எழுப்பியவாறு சென்றிருந்தனர்.

இவற்றைவிட பசுக்கள், இடபங்கள் பொறிக்கப்பட்ட டிஜிற்றடல் படங்களையும், சுவாமி விவேகானந்தரின் படத்தினை தாங்கியவாறும் பேரணியினர் சென்றிருந்தனர். இப்பேரணியினை சுன்னாகம் - பண்டத்தரிப்பு வீதியின் இரு மருங்குகளிலும் கூடி நின்ற மக்கள் கையசைத்து ஆதரவு தெரிவித்து தங்களது இந்து சமய உணர்வினையும் வெளிக்காட்டி நின்றனர்.

நண்பகல் 12.00 மணிக்கு சுன்னாகம் கதிரைமலைச் சிவன் ஆலயத்தை அடைந்த பேரணியினர் அங்கு இடம்பெற்றிருந்த பொங்கல் விழாவிலும் பங்குபற்றிச் சிறப்பித்திருந்தனர். (06)

# சிரமதானப் பணி முன்னெடுப்பு



(நவாலி)

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினரால் நவாலி ஆரியம்பிட்டி மயானத்தில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக துப்புரவு செய்யப்படாமையால் பற்றையாக இருந்த மயானம் நவாலி வடக்கு சனசமூக நிலையத்தினரால் சிரமதானம் செய்யப்பட்டமை குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது. (48)

# அன்றாட தேவையை நிறைவேற்ற சிரமப்படும் மானிப்பாய் மக்கள்

(மானிப்பாய்)

யாழ். குடாநாட்டில் மக்கள் நடமாட்டம் கூடிய பிரதேசமாக மாறிவரும் மானிப்பாய் நகரப் பகுதியில் பொதுமக்கள் தமது அடிப்படை, அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதில் பல்வேறு பிரச்சினைகளை தினமும் எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய் நகர்ப்பகுதியில் தரமான தனியார் மருந்து விற்பனை நிலையம் இல்லாமையினால் நோயாளர்கள் மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு யாழ்ப்பாணம், சுன்னாகம் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதாக நுகர்வோர் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களை விட மானிப்பாய் பிரதேசத்தில் அத்தியாவசியப் பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களும் சந்தையிலும் அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் தமது அன்றாட வாழ்வைக் கழிக்க குறித்த பிரதேசத்தில் பல்வேறு சவால்களை தினமும் எதிர்கொண்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த பிரதேசத்தில் அனைத்து வசதிகளும் கொண்ட அரச பொருள் விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என தெரிவிக்கும் பொதுமக்கள் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (66)

# ஊழியர் சேமலாப நிதி அறிவிப்பு வரும் வரை 12 வீதம்

## வடமாகாண பிரதித்தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொழில் திணைக்களத்தின் அறிவிப்பு வரும்வரை தொழில் தருநர்கள் தொழிலாளர்களுக்காகச் செலுத்தும் ஊழியர் சேமலாப நிதி 12 வீதமாகவே இருக்கும் என வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஊழியர் சேமலாப நிதிக்கான தொழில் தருநரின் பங்கு 14 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அதற்கான நியதிச் சட்ட உருவாக்கம் உப் விதிகளின் உருவாக்கம் போன்ற சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அவை பூர்த்தியாக்கப்பட்டு தொழில் திணைக்களத்தினால் அறிவிப்பு வழங்கும் வரை முன்னர் செலுத்தியது போன்றே 12 வீத பங்கைச் செலுத்தினால் போதும் எனவும் இந்த ஆண்டுக்காகச் செலுத்த வேண்டிய மிகுதியாகக் காணப்படும் 2 வீதமானவற்றை சில விதிகளுக்கு அமைய பின்னர் செலுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ,25)

# துப்பாக்கிகள், கிருமிகள் மற்றும் எஃகு

**கி.**பி.1500 இல் ஐரோப்பா, ஆசியா, வட ஆபிரிக்கா முதலிய பகுதிகள் தொழில்நுட்ப அடிப் படையில் முன்னேறியிருந்தன. அக்காலத்தில் அமெரிக்கக் கண்டத்தில் நிலவிய இன்கா, அஸ்டெக் பேரரசுகள் பெருநிலப் பரப்பை ஆண்டாலும் பழமையான கருவிகளைக் கொண்டிருந்தன.

அவுஸ்ரேலியா, அமெரிக்கா வின் பெரும்பாலான பகுதிகள், ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளில் வாழ்ந்த மக்கள் விவசாயப் பழங்குடிகளாகவும், வேட்டையாடி உணவு சேகரிக்கும் பழங்குடித் தன்மை கொண்டவர் களாகவும் இருந்தார்கள்.

ஐரோப்பியர்கள் தொழில்நுட் பத்தில் முன்னேறினார்கள். துப்பாக்கியும், எ.்கும் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விளைவே. இந்த தொழில்நுட்ப, அரசியல் வேறுபாடுதான் ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு அடித்தளமிட்டன; இன்றைய சர்வதேச சமத்துவமின்மைக்கும் காரணமாக அமைந்தது என்கிறார் "துப்பாக்கிகள், கிருமிகள் மற்றும் எ.்கு" என்ற நூலில் ஜாரேட் டயமண்ட்.

இவ்வேறுபாடு ஏற்பட்டதற்கான காரணமாக சிலரால் முன்வைக்கப் படும் இரு கருத்துகளை ஜாரேட் டயமண்ட் மறுக்கிறார்.

**1.** ஆபிரிக்க, அவுஸ்ரேலியப் பழங்குடியினத்தவர் பரிணாம வளர்ச்சியில் பின்தங்கியவர்; அறிவுத்திறனில் குறையுடையவர். இன மேன்மையை அடிப்படை யாய்க் கொண்டிருக்கும் இக்கருதுகோள் பிழையானது என்று நிறுவுகிறார் ஜாரேட்.

**2.** காலநிலை ஏற்படுத்திய வாய்ப்புகள். இக்கோட்பாடும் குழப்பமானது என்பது ஜாரேட்டின் வாதம்.

துப்பாக்கிகள், கிருமிகள் மற்றும் எ.்கினை அறுதிக் காரணிகளாக முன்வைக்கும் ஜாரேட், அதனை விளக்குவதற்கு 13000 ஆண்டுகால வரலாற்றை அலசுகிறார்.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முக்கிய காரணம் உணவு உற்பத்தி. தென்மேற்கு ஆசியாவி லும், சீனாவிலும் முதன் முதலில் உணவுக்கான பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஏனென்றால் அங்கே தான் விதை எடை அதிகம் கொண்ட தானியங்கள் காட்டுப் பயிர் களாக வளர்ந்தன. முக்கியமாக அரிசி, கோதுமை முதலியன இப்பகுதிகளில் காட்டுப் பயிர்களாக வளர்ந்தமையால் அவற்றை பண்ணைப்பயிர்களாக மாற்றுதல் எளிமையாக இருந்தது.




இந்த முதல் படியை எடுத்து வைத்த பின் பழ மரங்களைப் பயிரிடுதல், வணிகப் பயிர்களைப் பயிரிடுதல் என அடுத்த படிகளில் எளிதாக ஏற முடிந்தது. முக்கியமான உணவு தானியங்கள் காட்டுப்பயிர்களாய் வளராத பகுதிகளில் மிகப் பிந்தியே உணவு உற்பத்தி தொடங் கியது. சோளம், கம்பு, கிழங்கு வகைகள் பிற இடங்களில் பயிரிடப்பட்டன.

யுரேசியப் பகுதியில் விவசாய தொழில்நுட்பம் எளிதாகப் பரவியது. ஓரிடத்தில் ஒரு பயிர் பண்ணைப் பயிராக மாற்றப்பட்டால் விரைவில் வேறு பகுதிகளும் அப்பண்ணைப் பயிரை உற்பத்தி செய்யத் தொடங்கின. மீண்டும் காட்டுப் பயிரைப் பல தலைமுறைகள் பயிரிட்டு பண்ணைப்பயிராக மாற்ற முயலவில்லை.

மேற்கு கிழக்காக அட்சரேகைகளைப் பொதுவாய்க் கொண்டு இப்பகுதிகள் பரவியிருந்தன. தட்பவெப்பநிலை இப்பகுதிகளில் ஒரே போலிருந்தது. சூழியல் தடைகளும் இந்நிலப்பகுதியில் அதிகமில்லை.

ஆனால் தெற்கு வடக்காகப் பரவி யிருந்த ஆபிரிக்க, அமெரிக்கக் கண்டங்க ளின் பகுதிகளில் தட்பவெப்பநிலைகள் வேறுபட்டிருந்தன. ஓரிடத்தில் விளையும் பயிர்கள் இன்னொரு இடத்தில் விளைய முடியாது. இதனால் இந்நிலப்பகுதிகளில் விவசாயம் பரவ முடியவில்லை.

நாகரிகம் வளர வளர மனிதன் பெரிய காட்டுப் பாலூட்டிகளை வீட்டு விலங்குகளாக மாற்றினான். யுரேசியப் பகுதியில் தான் காட்டுப் பாலூட்டிகள் அதிக அளவில் இருந்தன. ஆபிரிக்கப் பகுதியில் காட்டுப்பாலூட்டிகள் அதிக அளவில் இருந்த போதும் அவை மனிதனின் வீட்டு விலங்குகளாய் மாறும் தன்மை கொண்டவையாக இல்லை. (வீட்டு விலங்குகளாய் மாறுவதற்குத் தேவை யான சில குணாதி சயங்களையும் ஜாரேட் பட்டியலிடுகிறார்) யானை போன்றவை பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளாக மாறினாலும் வீட்டு விலங்குகளாக மாறவில்லை.

(பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு - காட்டு விலங்காய் பிறந்து வளர்ந்து ஒரு கட்டத்தில் மனிதனால் பிடிக்கப்பட்டு அவனுக்குக் கீழடங்கும் விலங்கு; வீட்டு விலங்கு - பல தலைமுறைகள் மனி தனுடன் வளர்ந்து, மனிதனுடன் ஒத்துப் போகும் அளவுக்கு மரபணு மாற்றம் பெற்ற விலங்கு)

இந்த வீட்டு விலங்குகள் சுமையை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டுசெல்லவும், மனிதனைப் பாது காக்கவும், மனிதனுக்குத் தேவையான புரதச்சத்தைப் பால், மாமிசம் முதலிய வற்றின் மூலம் அளிக்கவும் செய்தன.

வீட்டு விலங்குகள் அதிகமாக இல்லாத பகுதிகளில் மனிதர்கள் வேட்டையாடுவதன் மூலமே தங்களுக் கான புரதச்சத்தைப் பெற முடிந்தது. இதனால் அப்பகுதிகளில் விவசாயம் முழுமையாக வேரூன்றவும் முடியவில்லை.

வீட்டு விலங்குகளிடமிருந்து மனிதனுக் குக் கிடைத்த மற்றொரு பரிசு - கிருமிகள். மனிதன் வீட்டு விலங்குகளுடன் நெருக்க மாக இருந்து, அவற்றின் பால், மாமிசம் முதலியவற்றை உட்கொண்டதால் அவற் றிடமிருந்த கிருமிகள் மனிதனுக்குப் பரவின. ஆரம்பத்தில் மனிதனைச் சுரண்ட வழியற்றிருந்த கிருமிகள் போகப் போக பரிணாம வளர்ச்சி பெற்றுத ங்கள் விருந்தாளியை விருந்தாக உண்ணத் தொடங்கின. மனிதனும் மரபணு மாற்றம் பெற்று நோயெதிர்ப்பு சக்தியை அதிகமாக்கிக் கொண்டான்.

இதனால் வீட்டு விலங்குகள் அதிகம் இல்லாத அமெரிக்க ஆபிரிக்க அவுஸ் ரேலிய மக்கள் வீட்டு விலங்குகளோடு வாழ்ந்து அவற்றின் கிருமிகளோடு பழகி நோயெதிர்ப்பு சக்தியும் பெற்றிருந்த யுரேசிய மனிதர்களைச் சந்தித்த போது நோயுற்று இலட்சக்கணக்கில் மாண்டனர்.

தொடர்ந்து எழுத்துகளின் வளர்ச்சி. மிகச்சில இடங்களில் தான் எழுத்துகள் சுயேச்சையாய் வளர்ச்சி பெற்றன. ஏனென்றால் எழுத்துமுறையை உருவாக் குவது மிகக் கடினமான விஷயம். சுமேரியா, அமெரிக்கா, சீனா, எகிப்து என இந்த இடங்களிலிருந்து தான் எழுத்துமுறை பிற இடங்களுக்குப் பரவியிருக்கும் என்கிறார் ஆசிரியர்.

தேவையே கண்டுபிடிப்புகளை உருவாக்குகிறது என்கிற கருதுகோ ளுக்குப் பதிலாக கண்டுபிடிப்புகளே தேவையை உருவாக்குகின்றன என்கிற மாற்றுக் கருதுகோள் முன் வைக்கப்படுகிறது. பல கண்டுபிடிப்புகள் அவற்றின் காலத்துக்கு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டதையும், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் பல அழிந்து போய் மீள் கண்டுபிடிப்பு செய்யப்பட்டதுமான நிகழ்வுகள் இக்கருதுகோளுக்கு சான்றாதாரமாக காண்பிக்கப்படுகின்றன.


மனிதர்கள் அதிகமான நெருக்கத்துடன், பிற சமுதாயங்களுடன் போட்டியாக வாழ்ந்த இடங்களில் புதுமைகள் விரைவாகக் கண்டுபிடிக்கப்பட்டன: பரவின; புதுமைகளை ஏற்றுக் கொள்ளாத சமுதாயங்கள் அழிந்து போயின.

ஆனால் தனித்தியங்கிய சமுதாயங் களுக்கு புதுமையை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை; போட்டியும் இல்லை. தனித்தியங்கிய சமுதாயங்களில் தொழில்நுட்பம் அதிகமாக வளர்ச்சி பெறாததற்கு இது முக்கியமான காரணம்.

மக்கள் நெருக்கம் போதிய அளவிலிருந்த பகுதிகளில் இருந்த இனக்குழுக்கள் தலைவருடன் கூடிய இனக்குழுக்களாக வளர்ச்சியடைந்தன. அவை பிற இனக்குழுக்களுடன் போரிட்டு அவற்றைத் தங்களின் கீழ் கொண்டுவந்தன. இல்லையென்றால் பிற சக்திகளின் அச்சுறுத்தலால் இக்குழுக்கள் ஒன்றிணைந்து வலுவான மைய அரசொன்றை உருவாக்கின. இம்மைய அரசின் உருவாக்கத்தால் தொழில்நுட்பம் சார்ந்த பணிகள் பெரிய அளவில் முன்னெடுக்கப்பட்டன.

இந்த தொழில்நுட்பம்தான் ஐரோப்பிய ஆதிக்கத்திற்கு அடித்தளமிட்டன; இன்றைய சர்வதேச சமத்துவமின்மைக்கும் காரணமாக அமைந்தது என்று நூலில் விளக்குகிறார் ஜாரே.

# டெங்கு பீதி!



"டெங்கு" காய்ச்சல் பீதி எல்லா இடங்களிலும் உள்ளன. இத்தகைய காய்ச்சலைப் பரப்புவது நுளம்பு. இந்த நுளம்புத் தொல்லை, சில பசிபிக் தீவுகளைத் தவிர, உலகெங்கிலும் நீக்கமற பரவி உள்ளது.

மனிதனுக்கு முன் தோன்றியது, நுளம்பு. மலேரியா, யானைக் கால் மற்றும் டெங்கு போன்ற நோய்களுக்குக் காரணம் நுளம்பு. பெண் நுளம்பு ஒருவருடைய இரத்தத்தை உறிஞ்சிக் குடித்தபின், இன்னொருவரைக் கடிக்கும்போது, முதல் நபரிடம் உள்ள கிருமிகள் அடுத்தவரின் இரத்தத்தில் கலந்து விடுகிறது. இதுவே, நோய் பரவுவதற்கு காரணம்.

மலேரியா நோய் பரவக் காரணமான ஒரு வகை நுளம்பு, "பிளாஸ்மோடியம்" எனும் நுண்ணிய கிருமியை தன்னுடன் எடுத்துச் சென்று, மனிதனின் இரத்தத்தில் விடுகிறது. அந்தக் கிருமி இரத்தத்தில் இனப்பெருக்கம் செய்யும்போது, மலேரியா பாதிப்பு ஏற்படுகிறது.

சரித்திரத்தில் கிரேக்க, பாபிலோனிய நாகரிகங்கள் அழிந்ததற்கு காரணம் மலேரியா என்றே சொல்லப்படுகிறது. மலேரியா என்ற சொல்லுக்கு, "கெட்ட காற்று" என்று பொருள்.

நுளம்புகள் மனிதனை மட்டும் கடிப்பதில்லை. வளர்ப்பு மிருகங்கள், காட்டு விலங்குகள், கால்நடைகள் மற்றும் பறவைகள் என, எதையும் அவை விட்டு வைப்பதில்லை.

நுளம்புகள் பறக்கும் போது கூட, உறவு கொள்வதுண்டு. பெண் நுளம்புக்கு ஒரு தடவை உறவு கொள்வதே, பல முறை இன விருத்தி செய்யப் போதுமானது.

பெண் நுளம்பு ஒரு முறை உறவு கொண்டதும், முதல் வேலையாக இரத்தம் குடித்து, ஈரப்பதமான இடத்தில் முட்டை (அதிகபட்சம், 500 முட்டைகள்) இடுகின்றன. 24 மணி நேரத்தில் முட்டையிலிருந்து வரும் குஞ்சு, பெரிய நுளம்பாகி விடுகிறது.

('நோய்களும், மருந்துகளும்' நூலிலிருந்து)



ஓம், சீனாவிலும் முதன் முதலில் உணவுக்கான பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஏனென்றால் ...ளின் பகுதிகளில் தட்பவெப்பநிலைகள் வேறுபட்டிருந்தன. ஓரிடத்தில் விளையும் பயிர்கள் இன்னொரு இடத்தில் விளைய பரவின. ஆரம்பத்தில் மனிதனைச் சுரண்ட வழியற்றிருந்த கிருமிகள் போகப் போக பரிணாம வளர்ச்சி பெற்றுக்கொண்டன ... இன்றைய சர்வதேச சமத்துவமின்மைக்கு காரணமாக அமைந்தது என்று நூலில் விளக்குகிறார் ஜாரெட்.



## சோலைவனம்?

இஸ்ரேலில் உள்ள நெகேவ் பாலைவனத்தில் "அல்கே" என்னும் சிறு தாவரத்தை வளர்க்க முடியும் என்பதை விஞ்ஞானிகள் நிரூபித்திருக்கிறார்கள்.

ஸ்பெயின் நாட்டு விஞ்ஞானிகளும், சகாரா பாலைவனத்தை ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானிகளும் பாலைவனத்தில் வீசும் கடுமையான சூரிய ஒளி சக்தி மூலம் அதிகமான மின் ஆற்றலைப் பெற முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள்.

இந்த மின் ஆற்றல் மூலம் பாலைவனப் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து சுலபமாகத் தண்ணீர் எடுக்கலாம் என்ற நம்பிக்கையும் பிறந்துள்ளது.

மொஸ்கோ நகரிலுள்ள கட்டடக்கலை ஆய்வு மைய விஞ்ஞானிகள் பாலைவன மணலில் வீடு கட்ட முடியும் என்று நிரூபித்துள்ளனர். பாலைவன மணலை 300 முதல் 900 பாகை சென்ரிகிரேற் வரை சூடுபடுத்தும்போது அந்த மணல், வீடு கட்டுவதற்கு உகந்ததாக மாறுகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

('அறிவியல் செய்திகள்' நூலிலிருந்து)



## எல்.ஆர்.ஈஸ்வரியின் சாதனை

எல்.ஆர்.ஈஸ்வரி தமிழ், மலையாளம், இந்தி, கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் 50 ஆண்டுகளில் 30,000 பாடல்கள் பாடி சாதனை நிகழ்த்தியுள்ளார். 1958 இல் "நல்ல இடத்து சம்பந்தம்" என்ற படத்தில் "அவரேதான் இவரு, இவரே-தான் அவரு" என்ற முதல் பாடல் இடம்பெற்றது. 1961 இல் பாசமலர் படத்தில் "வாராய் என் தோழி வாரா-யோ" பாடல் இடம்பெற்று இவருக்குப் பெரும் புகழ் தந்தது.

கோவில் கச்சேரிகளில் "கற்பூர நாயகியே கனகவல்லி", "மகமாயி சமயபுரத்துத் தாயே", "செல்லாத்தா எங்க மாரியாத்தா" போன்ற பாடல்களைப் பாடும்போது இவரே பக்தியில் சிலிர்த்து அழுதுவிடுவார்.

இவர் சொன்னது: "நான் பாடத் தொடங்கி விட்டால், அந்த மைக்தான் எனக்குக் கடவுள், காதலன், தாய், தந்தை எல்லாம். அதனால் மைக்கைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுத்தான் நான் பாடுவேன். நான் பக்திப் பாடல் பாடும்போது, அந்த மைக் உருவம் மாறி நான் எந்தக் கடவுளைப் பற்றிப் பாடுகிறேனோ, அந்தக் கடவுளாக ஆகிவிடும். என் மனத்தில் நான் ஒவ்வொரு கடவுளையும் ஒவ்வொரு மாதிரியாக உருவகம் செய்து வைத்திருக்கிறேன். பாடி முடிக்கும் வரை அந்த உருவம் என் கண் முன்னே நிற்கும்" என்கிறார்.

('சரித்திரம் படைத்த சாதனைப் பெண்கள்' நூலிலிருந்து)

# கத்தி, லிங்கா, காவியத்தலைவன் என சமீபத்திய ஏமாற்றங்களின் வரிசையில் "ஐ"யும் இணைந்து கொள்கிறது...

- சுந்தர் ஸ்ரீனிவாஸ் -

இ... பண்ண ஆசைப்படுகிறவர்கள். இரண்டு பெரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒன்று: கதையை எப்படி ஆரம்பிப்பது? எல்லாரிடமும் சுவாரசியமான கதை இருந்து விடுகிறது. ஆனால், கதாபாத்திரங்களையும் கதைக்களத்தையும் நிறுவி கதைக்கு நம்மைத் தயார்படுத்திக் கூட்டிப் போகிற முதல் அரை மணி நேரம் ரொம்ப முக்கியம்.

கத்தியிலும் லிங்காவிலும் காவியத் தலைவனிலும் இதே பிரச்சினை இருந்தது. இந்த இடங்களில் தான் படத்துக்கு சம்பந்தமே இல்லாத மொக்கை சீன்கள் திணிக்கப் படுகின்றன. "ஐ"யில் இப்படித் தான் பவர்ஸ்டார் எல்லாம் வருகிறார். இந்த gap filler காட்சிகளிலிருந்து அடுத்த தலைமுறை இயக்குநர்கள் தப்பிக்க வேண்டும்.

அடுத்த சவால்: வணிக சினிமாவில் பாடல்கள்! எனக்குத் தெரிந்து தமிழில் இரண்டே பேர் தான் பாடல்களைக் கச்சிதமாக கதையில் பொருத்துகிறார்கள். ஒருவர் கமலஹாசன். ஒரு கதையினூடே பாடல்களை எப்படி ஆரம்பித்து முடிக்கலாம் என்பதற்கு தசாவதாரம் ஒரு மிகச் சிறந்த உதாரணம். நான்கு பாடல்களில் ஒரு பாட்டுக் கூட, outdoor போய்விட்டு மறுபடி படத்துடன் இணைந்து கொள்ளாது. இன்னொரு classic உதாரணம் கௌதம் மேனன்.

ஷங்கரின் ஐ படத்தில் பாடல்கள் உயிரை எடுக்கின்றன. ஷங்கர் ஒரு மோசமான template இற்குள் சிக்கிக் கொண்டுள்ளார். இந்த நவீன உலகத்தில் அவர் வாய்ப்பாடுகளை நம்பிக் கொண்டிருக்கிறார். ஒரு indoor பாட்டு. ஒரு garden பாட்டு. ஒரு set பாட்டு. ஒரு concept பாட்டு. ஒரு gym fight. ஒரு cycle fight. ஒரு godown fight. ஒரு train fight.. இப்படி படம் முழுக்க வாய்ப்பாடுகள்.

படத்தில் நிறைய gimmics வருகின்றன. கையில் இருக்கிற அலைபேசி திடீர் என ஏமி ஜாக்சனாக மாறி, கையை விட்டு இறங்கி ஆடுகிறது. சீனாவின் மலைக்கும் அருவிக்கும் நடுவில் ஒரு விளம்பரம் எடுக்கிறார்கள். இப்படி துணுக்கு துணுக்காக படம் முழுக்க நிறைய விடயங்கள். ஆனால் இதை எல்லாம் பார்க்கும் போது, "இதனால் தாங்கள் சொல்ல வரும் கருத்து?" என்று கேட்கத் தோன்றுகிறது.

விக்ரம் மெனக் கெட்டு உடல்வருத்தி நடித்திருக்கிறார். விக்ரமின் நடிப்பைப் பார்க்கும் போது பாராட்டத் தோன்றவில்லை; பரிதாபமாக இருக்கிறது. "மனுஷன், உயி ரைக் குடுத்து நடிச்சிருக்கான்யா..." என யாரவது சொன்னால், "உயிரை எல்லாம் எவனத்துக்கு கொடுத்துக்கிட்டு? அதை பாவம் அவரே வைத்துக் கொள்ள வேண்டியதுதானே?" என்று கேட்க வேண்டும் போல இருக்கிறது.

இவ்வளவு ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்ப, என்ன தான் கதை என்று கேட்காதீர்கள். சாதாரண பழிவாங்கல் கதையே தான். அதே அபூர்வ சகோதரர்கள். அதற்குத் தான் இத்தனை build up. கட்டுக்கட்டாக பணத்தை கிழித்துப் போட்டிருக்கிறார்கள் என்று மட்டும் தெரிகிறது.

படத்தில் பிடித்திருந்த ஒரே விஷயம்: விக்ரமும் ஏமியும் யாரும் வர முடியாத ஒரு தனி இடத்தில் வீடு கட்டிக் கொள்கின்றனர். எல்லா காதலர்களின் கனவுமே அது தானே. அக்கம் பக்கம் யாருமில்லா பூலோகம் வேண்டும். அந்த கனவு வீட்டைப் பார்க்கும் போது கொள்ளை ஆசையாய் இருந்தது.

சென்னையில் grand mall திறக்கப் பட்ட புதிதில், விளம்பரக் கவர்ச்சிக்காக வாசலில் ஒரு யானையைக் கட்டிப் போட்டிருந்தார்கள். அதில் விசேஷம் என்னவென்றால் அது நிஜ யானை அல்ல: பஞ்சடைத்து உருவாக்கப் பட்ட ராட்சஷ யானை பொம்மை. துதிக்கையைத் தூக்குவது. காதை விசிறுவது, முன்னங்கால் நகர்த்துவது போன்ற அசைவுகள் பற்றரி கொண்டு இயக்கப்பட்டன. இது நிஜ யானை அல்ல என்று யாரும் சொன்னால் தான் தெரிந்தது. மிக பிரம்மாண்டமாக, நேர்த்தியாக, அழகாக இருந்தது அந்த யானை. ஷங்கரின் படங்களும் அந்த grand mall யானையைப் போலத் தான்.

ஆனால் அந்த பற்றரி யானையை விட பட்டாம்பூச்சிகள் அழகில்லையா? பிசாசும் தங்கமீன்களும் விண்ணைத் தாண்டி வருவாயாவும் அழகான பட்டாம் பூச்சிகள். அந்த பொம்மை யானையுடன் எல்லாரும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அதில் என்ன விசேஷம்? பட்டாம்பூச்சியைத் துரத்திப் பிடித்து அதனுடன் ஒரு selfie எடுத்துக் கொள்ள முடியுமா? அது தான் சினிமா இல்லையா?



## திருக்குறள்



திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் 133 அதிகாரங்களையும் 1330 குறள்களையும் கொண்டது. திருக்குறளைப் பற்றி நமக்குத் தெரியாத பட்டியல் பார்ப்போமா?

திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.

திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் 42,194. 247 தமிழ் எழுத்துக்களில் 37 எழுத்துகள் பயன்படுத்தப்படவில்லை.

திருக்குறளில் இடம் பெற்ற இருமலர்கள் அனிச்சம், குவளை.

திருக்குறளில் இடம் பெற்ற ஒரேயொரு பழம் நெருஞ்சிப்பழம்.

திருக்குறளில் இடம் பெற்ற ஒரே விதை குன்றிமணி.

திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து "ஔ"

திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள், பனை, மூங்கில்.


திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட ஒரே எழுத்து "னி". 1705 தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

திருக்குறளில் பத்துமுறை பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள்: "ளு, ஆ"

திருக்குறளில் இடம் பெறாத எண்: ஒன்பது.

## முள்ளங்கி

- முள்ளங்கியை அதிகம் சாப்பிட்டால் தோல் நல்ல பளபளப்பாக மாறும். அதில் கந்தகம் நிறைய உள்ளதால் தோல் வியாதிகள் மறையும்.
- தூக்கம் வராமல் தவிப்பவர்கள் முள்ளங்கியை உணவில் நிறைய சேர்த்துக் கொள்ளுங்கள் பிறகு பாருங்கள். படுக்கையில் சாய்ந்த சில நிமிடங்களில் தூக்கம் வந்துவிடும்.
- முள்ளங்கியில் விற்றமின் "சி" எனப்படும் கல்சியம் நிறைய உள்ளதால் பற்களுக்கும் எலும்புகளுக்கும் மிக நல்லது.
- சிறுநீரகத்தை காப்பதில் சிறப்பிடம் பெறுவது முள்ளங்கி, வாரம் ஒரு முறை முள்ளங்கி சாப்பிடுவோருக்கு சிறுநீரகச் செயலிழப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது.
- முள்ளங்கி சூப்பை காலை, வெறும் வயிற்றில் அருந்தி வந்தால், சிறுநீரகத்தில் ஏற்படும் தொற்று மறைந்து போகும்.
- கரும்புச் சாறோடு, முள்ளங்கி சாறும் கலந்து வந்தால், மஞ்சள்காமாலை சரியாகும்.
- இரத்தக் கொதிப்பு, மூட்டு வீக்கம், கால் வீக்கம், நீர்க்கடுப்பு ஆகியவற்றை முள்ளங்கிகுப் சரியாக்கும்.



# ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்கள்

# கால அட்டவணை தயாரிப்பு மும்முரம்

## இந்தியா, சீனாவுக்கு முன்னுரிமை



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்வார். அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதமளவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அரச பயணமாக கொழும்பு வருகிறார். இதன் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால உத்தியோகபூர்வ பயணமாக சீனா செல்கிறார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு பதவியேற்ற பின்னர் முதலாவது பயணமாக ஜனாதிபதி இந்தியா செல்லவுள்ளார். அதன்படி அவர் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தியாவுக்கு அரச பயணத்தை மேற்கொள்ள திகதிகள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. தற்போது இந்த திகதிகளில் இந்தியப் பிரதமரினால் சந்திப்பில் கலந்து கொள்ள முடியுமா என்பது தொடர்பில் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சு ஆராய்ந்து வருகின்றது. ஜனாதிபதி மைத்திரிபாலவின் உத்தியோகபூர்வ இந்திய பயணத்தின்போது இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல வேறு விடயங்கள் குறித்துப் பேச்சு நடாத்தப்படவுள்ளன. குறிப்பாக இந்தியா மற்றும் இலங்கை நாடுகளுக்கு இடையில் காணப்படும் அரசியல், பொருளாதார உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் இந்தப் பயணத்தின்போது ஆராயப்படவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபாலவின் இந்திய விஜயத்தின் பின்னர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கான முதலாவது அரச பயணமாக வருகிறார். இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வ பயணமாக சீனாவுக்குச் செல்கிறார். அங்கு நடைபெறும் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்கு சீன அரசால் விடுக்கப்பட்ட அழைப்பை ஜனாதிபதி மைத்திரிபால ஏற்றுக் கொண்டுள்ளார் என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பயணத்தின்போது சீன ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசுவர் எனத் தெரிகிறது.

## இனப்பாகுபாடற்ற சேவை; அதிகாரிகளுக்கு சஜித் பணிப்பு



வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ள சகல பிரதேசங்களும் எனது அமைச்சின் கீழ் வருகின்ற வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் சமுர்த்தி திவிநெகும போன்ற சகல நடவடிக்கைகளும் சமமாக பங்கிட்டு அப்பிரதேச அபிவிருத்திகள் நடைபெற வேண்டும் என புதிய அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் 24 மாவட்ட முகாமையாளர்கள், சமுர்த்தி அதிகார சபைகளின் சகல முகாமையாளர்களை நேற்று முன்தினம் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்

எனது அமைச்சின் கீழ் வருகின்ற எந்தவொரு அதிகாரியும் இனப்பாகுபாடு, அபிவிருத்தியில் இலஞ்சம், தாமதம், மக்களை அலைக்கழித்தல், என்ற வகையில் எனக்கு முறைப்பாடுகள் கிடைப்பின் உடன் நடவடிக்கை எடுக்கப்படும். என்னோடு வேலை செய்வதற்கு காலை 08 .30 பி.பகல் 04.30 என்ற அலுவலக நேரத்தை கடைப்பிடிக்க வேண்டாம். நேற்று முன்தினம் இரவு நான் கடமையேற்று 11.30 இரவு 12.00 மணிவரையும் அமைச்சில் இருந்து மக்களை சந்தித்தேன். இப்போது உங்களை சந்திக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கைதிகள் விடுதலை முதற்கட்டம் சுதந்திர தினத்தில்

## நடக்கிறது ஏற்பாடு



எதிர்வரும் சுதந்திர தினத்தன்று தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினர் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இந்தத் தகவலை புதிய அரசாங்கத்தின் மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு செத்சிறிபாயவிலுள்ள அமைச்சில் மகளிர் விவகார பிரதியமைச்சராக நேற்று முன்தினம் தனது கடமைகளை பொறுப்பேற்ற அவர், நீண்டகாலமாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில், ஜனாதிபதி, பிரதமர் உட்பட புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறினார்.

குறிப்பாக கடந்த கால யுத்தம் காரணமாக ஏராளமான தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். எந்தவித விசாரணைகளும் இன்றி சிறையில் வாடும் இந்த தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள், மனைவி மற்றும் பிள்ளைகளும் மிகவும் துன்பத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

இதனாலேயே தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது குறித்து புதிய அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது என்றும், இதற்கமைய முதற்கட்டமாக பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள சுதந்திர தினத்தன்று தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினரை விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறினார்.

## ஆயுதக்கப்பல் விவகாரம்; விசாரணைகளில் சூடு

அவென்காட் பாதுகாப்பு நிறுவனத்தின் பிரதானி நிஸ்ஸங்க சேனாதிபதி நாட்டை விட்டு வெளியேறத் தடை விதித்து கொழும்பு பிரதம நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் காலி துறைமுகத்தில் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையுடன் கப்பல் ஒன்று கைப்பற்றப்பட்டது.

குறித்த ஆயுதக் களஞ்சியசாலை கடற்பயணத்தின் போது, ஆபத்துக்கள் ஏதும் ஏற்படின் அவசரத் தேவைக்காக வழங்க பயன்படுத்தப்படுபவை எனவும், இது அவென்காட் பாதுகாப்பு நிறுவனத்துக்குச் சொந்தமானவை எனவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் காலி துறைமுகத்தில் காணப்படும் மிதக்கும் ஆயுதக்களஞ்சியசாலை தொடர்பில், தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதால், குறித்த நிறுவனத்தின் பிரதானி நாட்டிலிருந்து வெளியேறினால் விசாரணைகளுக்கு தடங்கல் ஏற்படக்கூடுமென குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தனித்துப்போட்டியிட ஜே.வி.பி. தீர்மானம்

பொதுத்தேர்தலில் எந்தவொரு கட்சியுடனும் கூட்டணி சேராது தனியாகவே மணி சின்னத்தில் போட்டியிட ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது. அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவில்லை என்ற போதும் மக்களுக்குத் தேவையான சேவைகளை ஆற்ற தேசிய நிறைவேற்றுப் பேரவையில் கட்சி அங்கம் வகிப்பதாக அறிவித்துள்ளது. இந்தப் பேரவையின் ஊடாக மக்கள் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

எவ்வாறெனினும், தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்த இறுதித் தீர்மானம், திட்டவட்டமாக அறிவிக்கப்படும் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மொகான் பீரிஸ் மீது விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)


சிறிலங்காவின் தலைமை நீதியரசர் மொஹான் பீரிஸ் நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிசாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள சதி புரட்சியொன்றுக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்று புதிய அரசாங்கம் குற்றம் சுமத்திவரும் நிலையிலேயே அது குறித்து சி.ஐ.டியினர் அவரிடம் விசாரணை நடாத்தியுள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்த 9 ஆம் திகதி அதிகாலை தனது தோல்வி உறுதியான நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும், அவரது சகோதரரான அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்சவும் இராணுவத்தைக் கொண்டு, மைத்திரிபால சிறிசேன விடம் ஆட்சியை கையளிக்காதிருக்க சதி புரட்சியொன்றுக்கு முயற்சித்தனர் என்று புதிய அரசாங்கம் குற்றம்சாட்டி வருகின்றது.

இந்த சதிப்புரட்சிக்கான திட்டம் அலரி மாளிகையில் தீட்டப்பட்ட கடந்த 9 ஆம் திகதி அதிகாலை தலைமை நீதியரசர் மொஹான் பீரிசும் அங்கிருந்த தாகவும், அவரும் அதற்கு ஆதரவு வழங்கியிருந்ததற்கான தகவல்கள் கிடைத்துள்ளதாக புதிய கூட்டணி அரசாங்கத்தின் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர ஆகியோர் குற்றம்சாட்டி வருகின்றனர்.

அதேபோல் ஜேவிபி, ஜாதிக்க ஹெல உறுமய ஆகிய கட்சிகளும் இதே குற்றச்சாட்டை தெரிவித்து வருகின்றனர்.



இந்த நிலையில் மங்கள சமரவீர நேரடியாகச் சென்று குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் இந்த சதி புரட்சி தொடர்பில் கடந்த வாரம் முறைப்பாடு செய்திருந்தார்.

அத்துடன் தேசிய நிறைவேற்றுச் சபையும் மகிந்தவின் சதி புரட்சி தொடர்பில் விசாரணை நடாத்துமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு உத்தரவிட்டுள்ளதுடன், இந்த விசாரணை தொடர்பில் விரைவில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வடக்கு அதிவேகசாலை ஆரம்ப மதிப்பீட்டில் முரண்

### இதுவரை கண்டுபிடித்த மோசடிகளில் இதுவும் ஒன்று



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் ஆட்சியின்போது இரண்டாயிரத்து நூறு கோடி ரூபா வரையான ஊழல் மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்த தகவல்களை எதிர்வரும் 29ஆம் திகதி வெளியிடவுள்ளதாகவும் அவர் கூறினார். நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷவின் கதைகள் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. எதிர்கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் பொய்யானவை எனக் கூறினார்.

எனினும் தவறுகள் இடம்பெற்றுள்ளமை இப்போது அறியக்கூடியதாகவுள்ளது. முன்னைய ஆட்சியின்போது இரண்டாயிரத்து 100 கோடி ரூபா வரையான மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த நிலையில் குறுக்கு ஒப்பந்தங்களும் செய்யப்பட்டுள்ளன. வடக்கு அதிவேக நெடுஞ்சாலையின் முழுமையான மதிப்பீடு 24 ஆயிரத்து 800 கோடி ரூபாவாக காணப்படுகிறது.

இருந்த போதிலும் அந்த பணிகளை ஏற்றிருந்த சீனா நிறுவனம் மேலும் ஐயாயிரம் கோடி ரூபா குறைந்து மதிப்பீட்டுக்கு வந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# அதிபர் வாமதேவனின் மணிவிழா சிறப்பு



(கோண்டாவில்)

கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலய அதிபர் கணிதச்சுடர் சண்.வாமதேவனின் மணிவிழா அண்மையில் பாடசாலையில் இடம் பெற்றது.

விழாவில் ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் இருந்து மங்கல இசையுடன் விழாநாயகர்கள் அழைத்துவரப்பட்டு மங்கலவிளக்கேற்றல் நிகழ்வுடன் விழா ஆரம்பமானது.

தொடர்ந்து குருமார் நல்லாசிகளுடனும் கல்விமான்களின் வாழ்த்துரைகளுடனும் பழைய மாணவர்களினால் வாமநாதம் எனும் அதிபர் நாமத்துடன் மலர் வெளியிடப்பட்டது. கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (48)

# பாடசாலை கொப்பிகளை கட்டாயம் வாங்கத் தேவையில்லை

## மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை இலட்சினை பொறிக்கப்பட்ட அப்பியாசக் கொப்பிகளையே மாணவர்கள் கட்டாயம் பாவிக்கவேண்டுமென்ற எந்தவித சுற்றறிக்கையும் பாடசாலைகளுக்கு அனுப்பப்படவில்லை மாணவர்கள் பாடசாலைக்கு வெளியில் கொள்வனவு செய்த கொப்பிகளை பயன்படுத்த முடியுமென மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.


அப்பியாசகொப்பிகளில் பாடசாலைகளின் சின்னம், முகப்பு என பொறிக்கப்பட்டு மாணவர்களுக்கு விற்பனை செய்யப்படுவதுடன் அதன் விலை வெளியீடங்களில் விற்கப்படும் விலையைவிட 10ரூபா முதல் 20 ரூபா அதிகமாக உள்ளதாக தினமுரசு பத்திரிகைக்கு பெற்றோர் கூறிய கருத்துக்களின்அடிப்படையில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன. ஆனால் தற்போதுஅந்த செய்திகளுக்கு பலன் கிடைத்துள்ளதாக கடந்த வருட இறுதியில் பெற்றோர் கட்டாயத்தின் பேரிலேயே அப்பியாசக் கொப்பிகளைக் கொள்வனவு செய்ததாக தொவித்துள்ளார்.

அது மட்டுமன்றி சில பாடசாலைகளில் தரம் 1,2 மாணவர்களுக்கு பேனாக்களை விற்பனை செய்துவிட்டு தற்போது பென்சில்கள் பாவிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டும் பெற்றோர் பேனாக்களுக்குரிய பணத்தினை பாடசாலை நிர்வாகத்தினர் வீண்விரயம் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர் இராஜேந்திரன் ஆகியோர் தெரிவித்ததாவது,

எந்தவொரு பாடசாலையினையும் கட்டாயப்படுத்தி கொப்பிகளை விற்பனை செய்யவேண்டாம் எனவும் மாணவர்கள் தமக்கு விரும்பிய இடங்களில் கொப்பிகளை கொள்வனவு செய்யமுடியும் எனத் தெரிவித்துள்ளனர். (17)

# சட்ட ரீதியான திருமணப்பதிவு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் சமய முறைப்படி திருமணத்தில் இணைந்துகொண்டவர்களுக்கான சட்டரீதியான திருமணப்பதிவு நேற்று முன்தினம் நடைபெற்றது. ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் இராசேந்திரம் குருபரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. . முல்லைத்தீவு மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலில் பிரதேச செயலகத்தின் மண்டபத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் இந்நிகழ்வு நடைபெற்றது. திருமணப் பதிவுகளுக்கு அழைக்கப்பட்ட 19 சோடிகளில் கலந்து கொண்ட 12 சோடிகளுக்கு மட்டும் திருமணப்பதிவுகள் நடைபெற்றதாக முல்லைத்தீவு மாவட்ட சட்ட உதவி ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் நி.நிர்த்தனரூபன் தெரிவித்துள்ளார். (160)

# பதிவிருக்கப் பெட்டகம்

சோவியத் யூனியனில் ஸ்டாலினுக்குப் பின்னர் குருசேவ் ஆட்சிக்கு வந்தார். அவர் படிப்படியாக சோவியத் யூனியனை சோசலிசப் பாதையிலிருந்து முதலாளித்துவப் பாதைக்கு மாற்றத் தொடங்கினார். குருசேவுக்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மத்தியிலும், சோவியத் மக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு இருந்தது. அந்த எதிர்ப்பை சித்தரிக்கும் நகைச்சுவை ஒன்று அந்தக் காலத்தில் உலகம் முழுவதும் வலம் வந்தது. அது இதுதான்:

மொஸ்கோவிலுள்ள அரச மாளிகைக்கு முன்னால் நின்று ஒருவர், "குருசேவ் ஒரு முட்டாள்" எனக் கோசமெழுப்பினார். விரைந்து வந்த சோவியத் பொலிஸார் அவரைக் கைது செய்து அவர் மீது வழக்குத் தொடுத்தனர்.

அவரது வழக்கை விசாரித்த நீதிபதி அவருக்கு 23 வருடங்கள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். தீர்ப்பை விவரித்த நீதிபதி, "நாட்டின் தலைவரை அவமரியாதை செய்ததிற்காக 3 வருடங்களும், ஒரு அரசாங்க இரகசியத்தை வெளியிட்டதற்காக 20 வருடங்களும்" எனத் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்!

*** *** *** ***

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் வாழ்ந்த தத்துவஞானி புரோட்டாகோரஸ் (Protogoras) அவர் "எல்லாம பொய்! உண்மை என்று எதுவுமே இல்லை!" என்று கூறினார்.

அவர் கருத்தை மறுத்த அரிஸ்ரோட்டில், "உங்கள் கொள்கை உண்மையா? பொய்யா? பொய் என்றால், உலகில் உண்மை இருக்கிறது என்று பொருள். உங்கள் கொள்கை உண்மை என்றால், உலகத்தில் உங்கள் கொள்கையாவது உண்மையாக இருக்கிறது என்பது புலனாகும்.

அப்போது, உலகில் உண்மையே இல்லை என்னும் உங்கள் கொள்கை தோற்கிறது. எப்படிப் பார்த்தாலும் உங்கள் கொள்கைக்கு தோல்விதான்" என்று கூறி வெற்றி பெற்றார்.

*** *** *** ***

நாம் தொட்டுப் பார்க்கின்ற, முகர்ந்து அறிகிற, கண்ணால் காண்கின்ற பொருள்களெல்லாம் உண்மையல்ல. இவை நமது புலனுணர்வுக்கு வெளியே நிலை கொண்டிருப்பதல்ல. நம்முடைய புலனுணர்வுகள், அக உணர்வுகள், கருத்துக்கள் இவற்றின் இணைப்புக்களே பொருள்களாக நமக்குத் தெரிகின்றன. புற உலகு உண்மையல்ல: நமது மனத்தின் படைப்பே என்பது இதன் பொருள்.

பிரம்மம் தவிர எதுவும் உண்மையல்ல. பிரம்மத்தின் படைப்பான மாயையே உலகமாகிய உருவத் தோற்றத்தைப் படைக்கிறது. அது கனவு போலப் பொய்யானது என்பது சங்கரரின் அத்துவித தத்துவம். இதைப் பற்றி ஒரு கதையுள்ளது.

ஒரு அத்துவிதப் பிரசங்கி தமது கொள்கையைப் பல உதாரணங்களோடு பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். ஒரு யானைப் பாகன், இவர் சொல்லுவது சரிதானா என்று பார்க்க தனது யானையைக் கூட்டத்தினுள் அவிழ்த்துவிட்டான். யானை கூட்டத்தினுள்ளே வந்தது.

எல்லோருக்கும் முன் அத்துவிதப் பிரசங்கியார் ஓடிப்போனார். பாகன் அவரிடம், 'யானை மாயையின் படைப்புத்தானே, உண்மையல்லவே, ஏன் ஓடுகிறீர்கள்?' என்று கேட்டான். அதற்கு 'நான் ஓடுவதும் மாயைதான்' என்றார் பிரசங்கியார்.

*** *** *** ***

சர்தார்ஜி ஒருவர் கடைக்கு வந்து, 'ஹொட் பேக்கில் வைக்கப்படும் உணவுப் பொருள் எவ்வளவு நேரம் சூடாக இருக்கும்?' என்று கேட்டார். கடைக்காரர், 'ஆறு மணி நேரம் சூடாக இருக்கும்...' என்றார்.

சர்தார்ஜி கடை முழுவதும் அலசி, நான்கு 'ஹொட் பேக்'குகளை தேர்வு செய்து, பில் போடச் சொன்னார். பில் போட்டு பணத்தை வாங்கிக் கொண்ட கடைக்காரருக்கு, சந்தேகம் எழுந்தது, சர்தார்ஜி எதற்காக ஒரே மாதிரி நான்கு, 'ஹொட் பேக்'குகளை வாங்குகிறார் என்று தெரிந்து கொள்ளாவிட்டால், பைத்தியமே பிடித்து விடும் போல இருந்தது. தாங்க முடியாமல் கேட்டே விட்டார்.

சர்தார்ஜி பொறுமையாகக் கூறினார்... 'ஐயா... நான் ரயிலில் இருபத்துநான்கு மணி நேரம் பயணம் பண்ணப் போகிறேன். வீட்டிலேயே சூடாக சாப்பாடு தயார் செய்து, ஒரு ஹொட் பேக்ல போட்டுக்கொள்வேன். பிறகு, ஒவ்வொரு ஆறுமணி நேரத்திற்கும் அதை ஒவ்வொரு ஹொட்பேக்கில் மாற்றிவிடுவேன். ஆக... 'இருபத்திநாலு மணி நேரமும் சாப்பாடு சூடாகவே இருக்கும். எப்படி என் ஐடியா?'

கேள்வி கேட்ட கடைக்காரர், தலையை பிய்த்துக் கொள்ளத் துவங்கினார்.

# பயங்கரவாத தடைச்சட்டம் உடன் நீக்கப்படவேண்டும்

## சம உரிமைகளுக்கான அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென சம உரிமைகளுக்கான அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டுமென அந்த அமைப்பு மேலும் கோரியுள்ளது.

ஏனெனில் அரசியல் கைதிகள் ஏற்கனவே தண்டனை அனுபவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்து, இராணுவத்தினரை முகாம்களுக்கு வரையறுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமைப்பின் அழைப்பாளர் ரவீந்திர முதலிகே கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர் மக்கள் அனைவரையும் மீள் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். மேலதிகமாக படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட இராணுவத்தினருக்கு தொழில் பயிற்சிகளை வழங்கி வேறு துறைகளில் ஊழிய வளமாக அவர்களை ஈடுபடுத்த முடியும் என சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரியுள்ளார்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றில் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்றெல்லாம் குறிப்பிடாது இலங்கையர் என்று குறிப்பிடப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல்வாதிகள் முக்கிய பிரமுகர்களின் கொலைகளைப் போன்றே ரத்துபஸ்வல போன்ற இடங்களில் பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்தும் விசாரணை நடாத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தை பாதுகாக்கும் ஓர் கவசமாக தேசிய பாதுகாப்பு பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து அரச நிறுவனங்களிலும் மொழி கரும பீடங்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும், தமிழ் மக்கள் தங்களது மொழியிலேயே சேவைகளைப் பெற்றுக்கொள்ள வழியமைக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் ஏற்பட்ட இழப்புக்களுக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார். இந்திய இலங்கை மீனவர் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# வெளியேறிய ஊடகவியலாளர்கள் மீண்டும் நாடு திரும்ப தயக்கம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவர்கள் இன்னமும் சுதந்திரமாக உலா வரும் நிலையில் புலம் பெயர்ந்த தமிழ் ஊடகவியலாளர்கள் எவ்வாறு நாடு திரும்புவது? - இவ்வாறு சுவிற்சர்லாந்தை தளமாகக் கொண்டியங்கும் சிவராம் ஞாபகார்த்தமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

புதிதாக ஆட்சியமைத்த அரசாங்கம் புலம்பெயர் ஊடகவியலாளர்களை இலங்கைக்குத் திரும்புமாறு விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே சிவராம் ஞாபகார்த்த மன்றத்தின் இணைப்பாளர் சண் தவராஜா விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு,

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலையடுத்து இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. சகல இன மக்களும் அனுபவித்து வந்த கொடுமைகள் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டு ஊழல் அற்ற புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வேளையில், நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அரசாங்க அதிருப்தியாளர்கள் ஆகியோரை மீண்டும் நாட்டுக்குத் திரும்புமாறு புதிய அரசாங்கத்தின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. புதிய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று ஒரு சில சிங்கள ஊடகவியலாளர்கள் நாடு திரும்பினர் என அறிகிறோம். இன்னும் சிலர் விரைவில் நாடு திரும்ப உள்ளனர் என்றும் அறிகிறோம். சிங்கள ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் முன்னைய அரசாங்கங்களதும், அரச படைகளதும் அதிருப்திக்கு மாத்திரமே ஆளாகி இருந்தனர்.

ஆனால், தமிழ் ஊடகவியலாளர்கள் இதற்கும் அப்பால் இராணுவத்தின் ஒட்டுக் குழுக்களின் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி இருந்தது. எனவே, தமிழ் ஊடகவியலாளர்கள் நாடு திரும்பும் விடயத்தில் இப்போது முடிவு எடுக்க முடியாத சூழலே உள்ளது. கடந்த காலங்களில் இலங்கையில் அநேக ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இன்று ஊடக சுதந்திரம் பற்றிப் பேசும் அநேகர் இவ்வாறு கொல்லப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்களைப் பற்றியே அதிகம் பேசுகிறார்கள். படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஜி.நடேசன் மற்றும் டி.சிவராம் போன்றவர்களைப் பற்றிப் பேசுவது குறைவு.

இவர்களைக் கொலை செய்தவர்கள் இன்னமும் சமூகத்தில் சுதந்திரமாக உலா வரும் நிலையில் புலம் பெயர்ந்த தமிழ் ஊடகவியலாளர்கள் எவ்வாறு நாடு திரும்புவது? எனவே புலம்பெயர் தமிழ் ஊடகவியலாளர்களை இலங்கைக்கு மீள அழைத்துக் கொள்வதில் புதிய அரசாங்கம் உண்மையாகவே அக்கறை கொண்டிருக்குமானால், கடந்த கால ஆட்சிகளின் போது கொல்லப்பட்ட அனைத்து ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பாகவும், ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டமை தொடர்பாகவும் நீதியான விசாரணைகளை நடாத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சிவராம் நினைவு மன்றம் கேட்டுக் கொள்கிறது. இதன் மூலமே இலங்கையில் சட்டத்தின் ஆட்சி நிலவுகின்றது என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதுடன் புலம்பெயர்ந்த ஊடகவியலாளர்களும் நம்பிககையோடு நாடு திரும்ப முன்வருவார்கள் என்ற சேதியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

# பிரதம நீதியரசர் மீதுவிசாரணை ஆரோக்கியமான அறிகுறி

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதம நீதியரசரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை மேற்கொண்டமையானது எதிர்காலத்திற்கு ஆரோக்கியமான முன்னுதாரணம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி நீதி அனைவருக்கும் சமம் என புலப்படுவதாக அந்த சங்கத்தின் செயலாளர் அஜித் பத்திரன தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய, பிரதம நீதியரசரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் வாக்குமூலம் பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊழல்கள் மீதான விசாரணை புதிய அரசுக்கு சவால்



## பிரதமர் ரணில் சொல்கிறார்

கடந்த கால ஊழல், மோசடிகள் குறித்து விசாரணை நடாத்துவதில் பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை காணப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான வரையறைகளை நீக்கவுள்ளதால் நாட்டைவிட்டு வெளியேறிய ஊடகவியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகளை மீண்டும் நாடு திரும்புமாறு ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

சிறுபான்மை தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என சர்வதேச ஊடகமொன்றுக்கு அழித்த பேட்டியில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்ற தேர்தல் மாற்றத் திற்கான, நல்லிணக்கத்திற்கான தேர்தல் என பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# மாநகரசபை கழிவு பொறிமுறை வலி.தென்மேற்கு மக்களை அழிக்கும்

### மனித உயிர்களைக்காக்க முன்னோடித்திட்டம் அவசியம்

ஒரு பிரதேச மக்களை பாதுகாக்க நடவழக்கை எடுத்து இன்னொரு பிரதேச மக்களை அழித்துவரும் "மாநகர நாடகம்" இன்று வலி. தென்மேற்கில் இடம்பெறுகின்றது.

இந்த நாடகத்தை நான் நழத்துக்காட்டாமல் விடயத்திற்கு வருகின்றேன்.

யாழ். மாநகர சபையின் ஆணையாளர் இன்று மக்கள் பிரதிநிதிகள் இல்லாத சூழலில் நிர்வாகம் செய்கின்றார்.

யாழ். மாநகரத்தில் சேரும் திண்மக் கழிவுகளை சேகரித்து ஆபததான மலக்கழிவுகள். ஆஸ்பத்திரிக் கழிவுகளையும் தினமும் சேகரித்து தனது 100 பேர் கொண்ட பயிற்சி அற்ற தொழிலாளர்கள். அனுபவமற்ற சாரதிகளைக் கொண்டு கல்லுண்டாய் பிரதேசம் மீண்டும் மீண்டும் கழிவுகளின் குதமாகிறது.

மாநகர சபையின் பொருத்தமற்ற நிர்வாக நடவழக்கையினாலும இறுதி கழிவகற்றும் கல்லுண்டாய் பிரதேசத் தில் பிற்போக்கிலான திண்மக் கழிவகற்றும் பொறி முறை யினாலும் வலி. தென்மேற்கில் மக்களுக்கு ஏற்படப்போகும உயிர் ஆபத்துக்கள் ஒவ்வொன்றுக்கும் வகை சொல்ல வேண்டிய கடப் பாட்டினை – பொறுப்பினை யாழ். மாநகர சபையும். வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சர் அவர்க ளும்பொறுப்பேற்க வேண்டிய சூழல் மிகவிரைவில் எதிர்கொள்ளவேண்டி வரும்.

இன்று கல்லுண்டாய் கழிவு என்பது காக்கைதீவு. ஆனைக கோட்டை. நவாலி வடக்கு. நவாலி தெற்கு. நவாலி கிழக்கு மற்றும் இதர பிரதேச மக்களை சுவாச நோய் (ஆஸ்[illegible]. புற்றுநோய். தோல் வியாதி . டெங்கு மற்றும் இதரநோய் [illegible] மூலம் ஆபத்தான விளைவுகளை மக்கள் அனுபவிக்கவுள்ளனர்.

மாநகர ஆணையாளர் ஒரு பிரதேச மக்களைக் காக்க வென கூறி வலி. தென்மேற்கு மக்களை பழிப்பழியாக அழிக்கும் நட வழக்கை அரங்கேறிவிட்டது.

கல்லுண்டாய் பிரதேசம் முழுவதும் வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளரின் நிர்வாக எல்லைக்குட்பட்டது. இதுவரை காலத்தில் வலி. தென்மேற்கு பிரதேச செயலகமோ அன்றி பிரதேச சபையோ சட்டத்தின் முன் எவ்வித காணிகளையும் மக்களை அழிக்கும் திட்டத்திற்காக வழங்கவில்லை.

யாழ். மாநகர சபையானது வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளரின் அங்கீகாரத்துடனேயே உள்நுழை விசை அனுமதி பெற்று உள்வரவேண்டும்.

ஆனால். மாநகரசபையோ மானிப்பாய்பிரதேச சபையின எல்லைக்குள் அத்துமீறி விட்டு நியாயம் பேசவும் முற்படு கின்றனர்.

எது எப்படியிருப்பினும் வலி. தென்மேற்கு கல்லுண்டா யில் கழிவுகள் கொட்டப்பட்டு எரியூட்டப்படுவது உடன் நிறுத்[illegible] படவேண்டும்.

யாழ். மாநகரசபை தனது எல்லைக்குள் ஒரு நவீன தொழிலநுட்ப தொழில் நுணுக்க முறையை வெளிநாட்டில் இருந்தோ அல்லது கொழும்பில் இருந்தோ தருவித்து தனது சகல கழிவுகளையும் தானே தரம்பிரித்து மீள் சுழற்சி (Recycle) பாவனைக்கு உட்படுத்தி பசளையாக்கும் திட்டத்தை அமுல் படுத்த வேண்டும். ஏனைய கழிவுகளை மீள் உரு வாக்கத்திற்கு பயன்படுத்த வேண்டும். இந்த விடயங்களை யாழ். மாநகர பகுதி பொறியியல் துறை ஏன் மாநகர நிர்வாகத்திற்கு விளக்கி அதனை பெற்றுக்கொடுக்கவில்லை.

நான் இந்த விடயங்களை விளக்கவேண்டிய தேவையில்லை. கல்லுண்டாய் ஊடாக நவாலி. அனைக்கோட்டை. காக்கைதீவு பிரதேச மக்களுக்கு வரும் ஆபத்துக்களை முதலில் உணரவேண்டிய பொறுப்பு நீதியரசர். வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரனை சேரும்.

இதனைவிட வடக்கு சுகாதார அமைச்சர். யாழ். அரசாங்க அதிபா. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (RDHS) மத்திய சுற்றாடல் அதிகார சபை. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் உதவிப் பணிப்பாளர் மற்றும் சு. வை. அதிகாரிகள். சபை தவிசாளர் ஆகியோர் மக்களுக்கு வகை சொல்ல வேண்டியவர்கள்.

தயவு செய்து கூட்டங்களை கூழ நிர்வாகம் செய்து மக்களை ஏமாற்ற வேண்டாம். சுன்னாகம் கழிவு ஒயிலால அழிந்து விட்டது. மக்கள் இனி பாதுகாப்பான இடம்தேழ நகர வேண்டிய அவலம் வந்துவிட்டது.

இதேபோல கல்லுண்டாய் கழிவு குதத்தால் வயல் வளம். கடல் வளம். வளி மண்டலம். நிலத்தடி நீர் அழிந்து விட்டது.

இனி வரப்போவது எதுவென்று சகலருக்கும் புரியும். வருமுன் காக்கவேண்டும். வந்தபின் யோசிப்பது – ஆர்ப்பாட்டம் நடாத்துவது. கூட்டம் நடத்துவது நஷ்ட ஈடு வழங்கு வது என்பது யாவும் பொய்.

எனவே . யாழ். மாநகர சபை கழிவுகளை கல்லுண்டா யில் கொட்டுவதை நிறுத்தி மாற்றுவழிக்கு திரும்புவது பொருத்தமானது என்பதனை முன்வைத்து அமைகின்றேன.


– து. மன்னவன்,
வலி. தென்மேற்கு

46. 1 தொடக்கம் 15 வரையுள்ள இரட்டை இலக்கங்களின் கூட்டுத் தொகையை எழுதுக. ............................

47. குறித்த பிரதேசமொன்றில் பாடசாலைகள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட விடயங்கள் அட்டவணையில் உள்ளன.

| விடயம் | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|
| மாணவர்களின் எண்ணிக்கை | 500 | 650 | 800 | 950 | .......... |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | 40 | 48 | ........ | 64 | 72 |
| கட்டிடங்களின் எண்ணிக்கை | 25 | 30 | 35 | 40 | 45 |

i. இடைவெளிகளுக்கு வரவேண்டிய எண்ணிக்கைகளை எழுதுக.
ii. 2011ம் ஆண்டில் இருக்கக்கூடிய மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் கட்டிடங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது? ............................
iii. அருகிலுள்ள நிரல்வரைபில் கட்டிடங்களின் எண்ணிக்கையை நிழற்றிக் காட்டுக.





48. பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளவற்றின் ஆங்கிலப் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.

1. 
..............................

2. 
..............................

3. 
..............................

4. 
..............................

49. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க்கருத்தை எழுதுக.
i. Class room ................................ ii. Time table ................................
iii. Office room ................................ iv. Playground ................................

50. பின்வரும் தமிழ்ச்சொற்களின் சிங்கள வடிவத்தை தமிழ் எழுத்துகளில் எழுதுக.
i. பிறந்தநாள் ................................ ii. பாடசாலை ................................

51. "எனக்குச் சிறகு முளைத்தால்......" எனும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஒரு வாக்கியத்தில் 4 சொற்களுக்குக் குறையாமல் 5 வாக்கியங்களை எழுதுக.

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**





# கல்வி முரசு



பின்வரும் பந்தியை வாசிக்க

மேற்கு அடிவானில் மறைந்துகொண்டிருக்கும் ஆதவனால் வானம், மஞ்சள், சிவப்பு நிறத்தில் அழகாகத் தென்பட்டது. இரை தேடிச் சென்ற பறவையினங்கள் தமது கூடுகளை நோக்கிப் பறந்தன. மாலையில் மலர்கின்ற அந்திமந்தாரைப் பூக்களின் மணம் கமகம என்றிருந்தது. அலுவலக வேலை முடிந்த பெரியவர்கள் கடைகளில் வாங்கிய அவசியமான பொருட்களுடன் வீடுகளை நோக்கி விரைந்தனர். சிறுவர்கள் மட்டும் இன்னும் விளையாடிக் கொண்டிருப்பதை விட்டுவிடவில்லை.

1. வானம் என்ன நிறங்களில் காட்சியளித்தது? ........................................
2. மாலையில் மலர்கின்ற பூ எது? ........................................
3. சிறுவர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் ? ........................................
4. பந்தியிலிருந்து பெயர்ச்சொற்கள் இரண்டினை எழுதுக. ........................................
5. பந்தியிலிருந்து வினைமுற்றுக்கள் இரண்டினை எழுதுக. ........................................

6. பின்வரும் சொற்களுக்கான எதிர்ச்சொற்களை எழுதுக.
1) பெரியவர் :- ---------------------------- 2) இரை :- ----------------------------
3) வீடு :- ---------------------------- 4) வானம் :- ----------------------------

7. பின்வரும் சொற்களுக்கான எதிர்ச்சொற்களை எழுதுக.
1) பெரியவர் :- ----------------------------
2) அடி :- ----------------------------
3) முடிந்த :- ----------------------------
4) வீடு :- ----------------------------

8. வலைப்பலம் வாலைப்பழும் வாழைப்பழம் வாழைப்பளம்
9. முயற்ச்சி முயட்சி முயர்ச்சி முயற்சி
10. கடட்கரை கடற்கரை கடட்கறை கடக்கரை

பின்வரும் பழமொழிகளில் விடுபட்ட இடங்களை உரிய சொற்கொண்டு பூரணப்படுத்துக.

11. அகத்தின் அழகு ........................................ தெரியும்
12. அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் ........................................
13. ........................................ என்றால் பிணமும் வாய் திறக்கும்.

சரியான விடையின் கீழ் கோடிடுக

14. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்?
1) பண்டிட் அமரதேவ 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
3) திரு.ஆனந்த சமரக்கோன் 4) திரு. சுனில் சாந்த

15. பாதுகாப்பான ஒரு சந்தர்ப்பமாக இருப்பது
1) கண்ணாடிப் பொருட்களைக் கையில் வைத்துக்கொண்டு ஓடுதல்
2) பெருந்தெருவைக் கடக்கும்போது மஞ்சள் கோட்டைப் பயன்படுத்துதல்
3) பாதையோரமாக புத்தகம் வாசித்தபடி நடத்தல்.
4) வாகனமோட்டும் போது கைத்தொலைபேசியில் கதைத்தல்.

16. இலங்கையின் தேசிய விளையாட்டு
1) கிரிக்கெட் 2) கரப்பந்து 3) உதைபந்து 4) கூடைப்பந்து

17) வயல் உழுவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் உபகரணம்
1) மண்வெட்டி 2) அலவாங்கு 3) கலப்பை 4) முள்ளுவாரி

18. நுளம்பு வகை ஒன்றினால் பரப்பப்படும் நோய்களில் ஒன்று
1. யானைக்கால் நோய் 2. பறவைக்காய்ச்சல் 3. சின்னமுத்து 4. தடிமல்

19. 
உருவில் காணப்படுவது
1. ஒரு பாடசாலையின் சின்னமாகும் 2.இராணுவத்தினரின இலச்சினையாகும்
3. நாட்டின் தேசிய இலச்சினையாகும் 4. பௌத்த மத அடையாளமாகும்


20. வருடத்தின் எல்லா நாட்களிலும் பூத்திருக்கக்கூடிய ஒரு பூ
1. நித்திய கல்யாணி 2. முள்முருங்கை 3. நாகமலர் 4. நீல அல்லி

21. இலங்கையிலுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை
1. 6 ஆகும் 2. 7 ஆகும் 3. 8 ஆகும் 4. 9 ஆகும்

22. கத்தரிப் பூவின் நிறம்
1. நீலமாகும் 2. சிவப்பாகும் 3. ஊதா ஆகும் 4. வெள்ளை ஆகும்

23. நத்தையொன்றின் பயணப்பாதையில் ஏதாவது தடை ஏற்பட்டால்
1. அது தன் பயணத்தை வேறு திசைக்கு மாற்றிச் செல்லும்
2. அது தன் உடலைச் சுருட்டி ஓட்டுக்குள் ஒளிந்துகொள்ளும்
3. அது முன்னிலும் வேகமாக ஊர்ந்து செல்லும்
4. அது எந்த மாற்றமுமின்றி அமைதியாக இருக்கும்

24. பின்வரும் பறவைகளில் தாவரப்பாகங்களை மாத்திரம் உண்ணும் பறவை எது?




25. இருளை விரும்புகின்ற ஒரு பிராணி
1. நுளம்பு 2. வௌவால் 3. கரப்பான் பூச்சி 4. பல்லி

26. விரைவில் ஆவியாகக் கூடிய திரவம்
1. தேங்காய் எண்ணெய் 2. வினாகிரி 3. நீர் 4. பெற்றோல்

27. முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் பிராணிகளின் கூட்டம்
1. கோழி, அணில், எலி, பல்லி 2. வௌவால், நாய், பூனை, குதிரை
3. புறா, முதலை, ஆமை, கிளி 4. வாத்து, பல்லி, ஆடு, புலி


28. 
இக் கருவி பயன்படுத்த முடியாத சந்தர்ப்பம் ஒன்று.
1. கடினமான பொருள் ஒன்றை வெட்டுவதற்கு
2. மரக்கறி வகைகளை துண்டாக்குவதற்கு
3. கீரை வகைகளை அரிவதற்கு
4. நகம் வெட்டுவதற்கு

29. காட்போட் பெட்டியொன்றில் பாரமான பொருட்களை வைத்துக் கட்டிக் கையில் தூக்கிச் செல்வதற்கு பொருத்தமான நூல் வகை
1. நைலோன் நூல் 2. இறப்பர் பட்டி 3. தும்புக் கயிறு 4. சணல் கயிறு

30. 
உலர்ந்த மண் கட்டியொன்றை நீர்க்குவளையொன்றினுள் மெதுவாக இடும் போது படத்தில் உள்ளவாறு குமிழிகள் வெளியாகின. இக்குமிழிகள்
1. நீர்த்துளிகளாகும் 2. மண்ணின் கூறுகளாகும்
3. வாயுக் குமிழிகளாகும் 4. சிறிய பூச்சியினங்களாகும்

31. ஓட்டப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ள ஒருவருக்கு ஓடுவதற்கு முன்பாக உண்ணக் கொடுக்கப்படுவது
1. சீனி 2. குளிர்பானம் 3. குளுக்கோசு 4. உப்பு

32. சுவரில் அறையப்பட்டுள்ள ஆணி ஒன்றைக் கழற்றுவதற்கு பயன்படும் உபகரணம்



33. இலங்கையின் மிக உயரமான மலை
1. சிவனொலிபாத மலை 2. பீதுருதாலகால மலை
3. நமுனுக்குல மலை 4. நக்கில்ஸ் மலை




34. பின்வரும் இலை வகைகள் எத்தாவரத்துக்குரியன என்பதை கட்டமிட்டுத் தரப்பட்டுள்ள பெயர்களிலிருந்து தெரிந்து எழுதுக.

| கொய்யா | வேம்பு | மரவள்ளி | பலா | அலரி | தாமரை | சதைக்கரைச்சான் |
|---|---|---|---|---|---|---|

1.  ..............................

2.  ..............................

3.  ..............................

4.  ..............................


♦ பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி முழுவாக்கியமாக எழுதுக.

35. மாதம் /மரங்களில்/ஆகும்போது /சித்திரை /பூக்கின்றன /பூக்கள்

36. மின்னலுடன் /மழை /தொடங்கியது /இடி /கடும் /நாட்டில்

37. [2] [5] [4] [7] அட்டைகளில் எழுதப்பட்டுள்ள இவ் இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகச்சிறிய எண்ணைச் சொற்களில் எழுதுக.


38. 
உருவில் நிழற்றப்பட்டுள்ள கட்டங்களை முழு உருவின் பின்னமாக எழுதுக.

39. 
உருவிலுள்ள கடிகார முகத்தில் காட்டப்படும் நேரத்தை எழுதுக.
..............................

40. ஒரு வருடத்தில் 31 நாட்களைக் கொண்டுள்ள மாதங்கள் எத்தனை? ..............................

41. 360 இனிப்புகளை ஒரு வியாபாரி 9 பக்கற்றுகளில் அடைக்கிறார் எனின், ஒரு பக்கற்றில் அடங்கக்கூடிய இனிப்புகள் எத்தனை? ..............................

42. 3 மாம்பழங்களின் விலை 90 ரூபா எனின்,
5 மாம்பழங்களின் விலை என்ன? .............................. ரூபா


43. 
மின அலங்காரத் தோரணம் ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. அதில் இரண்டு மின்குமிழ்களுக்கு இடையிலான தூரம் 30 சென்றிமீற்றராகும். முதலாவது மின்குமிழில் இருந்து கடைசி மின்குமிழ் வரை இணைக்கப்பட்டுள்ள கம்பியின் மொத்த நீளம் யாது?
.............................. செ.மீ

44. ஒரு குவியலில் 48 அன்னாசிப்பழங்களும் மற்றொரு குவியலில் 42 அன்னாசிப்பழங்களும் இருக்கின்றன. இரு குவியல்களிலும் அன்னாசிப்பழங்கள் சமனாவதற்கு முதற் குவியலிலிருந்து எத்தனை அன்னாசிப்பழங்களை மற்றைய குவியலுக்குச் சேர்க்க வேண்டும்?
..............................

45. என்னிடமிருக்கும் 50 ரூபா பணத்துக்கு 16 ரூபா பெறுமதியுள்ள எத்தனை அப்பியாசக் கொப்பிகள் வாங்கலாம்?
..............................

# ஆட்சி மாற்றம் அவசியமானது ஏன்? இது தவிர்க்கமுடியாத உள்ளக சூத்திரம்

## மாதுலுவே சோபிததேரர் சொல்கிறார்



(கொழும்பு)

நடந்து முடிந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னணி குறித்து மாதுலுவே சோபித தேரருடனான நேர்காணல் ஒன்றை "ராவய" என்ற சிங்கள பத்திரிகை மேற்கொண்டது அதன் தமிழ் மொழியாக்கம் இங்கே தரப்படுகிறது.

கேள்வி : கடந்தகால ஆட்சியை தோற்கடிக்க வெற்றிகரமான வேலைத்திட்டத்தை முன்வைத்து முன்நின்று செயற்பட்டு வெற்றிபெற்றுள்ள சந்தர்ப்பத்தில் தற்போதைய நிலையை எவ்வாறு பார்க்கிறீர்கள் ?

பதில் : நாம் சாதாரண சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தோம், இத்திட்டமானது நபர் ஒருவரை வெற்றிபெறச் செய்யவோதோல்வியடையச் செய்யவோ அல்ல. மாறாக நாடு மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது. அதிலிருந்து நாட்டை மீட்கவே வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். சாதாரண நிலையில் முக்கிய காரணியாக நிறைவேற்று ஜனாதிபதி முறையே காணப்பட்டது. சிறந்த அரசியல் யாப்பை வழங்குமாறு நாம் கடந்த அரசாங்கத்தை வலியுறுத்தினோம். முன்னாள் ஜனாதிபதியும், முன்னைய காலத்தில் இதற்காக போரிட்டவர். இதனால் நாம் அவரது அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகித்தோம். மகிந்த சிந்தனையில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கோரினோம். எனினும், அவர் இறுதிவரை வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதன் காரணமாகவே நாட்கள் வரையறுக்கப்பட்ட வேலைத்திட்டமொன்றிற்காக பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க தீர்மானித்தோம்.

கேள்வி : அந்த வேலைத் திட்டத்தை வெற்றிபெறச்செய்யவா மைத்திரிபால சிறிசேன அவர்களை பொது வேட்பாளராக களமிறக்கினீர்கள்?

பதில் : அதை வெற்றிபெறச் செய்ய இறுதிவரை வாதப் பிரதிவிவாத கலந்துரையாடல்களில் ஈடுபட்டோம். இறுதி நேரத்தில் மைத்திரிபால சிறிசேன அவர்கள் போட்டியிட முன்வந்தார். எவராலும் எதிர்ப்புத் தெரிவிக்க முடியாத, அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆலோசனைகளையே நாம் முன்வைத்தோம்.

அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பொது மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் உட்பட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடினோம். பல துறைகளை சார்ந்தவர்களது ஆதரவை மைத்திரிபால சிறிசேனவுக்கு பெற்றுக்கொடுத்தோம்.

எமது நாட்டு மக்களுக்கும் இவ்வாறான ஒரு தேவை இருந்ததை நாம் பின்னர் கண்டு கொண்டோம். மக்கள் மிக மகிழ்ச்சியுடன் தமது வாக்குகளை பயன்படுத்தினர். தமிழ், முஸ்லிம் மக்களில் அதிகளவிலானோர் அவருக்கு வாக்களித்தனர். இன ரிதியாக, மத ரீதியாக பிரிந்திருந்த நாட்டை பொதுக் கொள்கையின் கீழ் ஒன்றுபடுத்தினோம். இது தேர்தல் வெற்றியை விட மிகப் பெரிய வெற்றியாகும் எனக் கருதுகின்றேன்

கேள்வி : நாட்டிற்கு புதிய அரசியல் யாப்பு தேவையா?

பதில் : தற்போதைய தருணத்தில் தேவையான சீர்திருத்தங்களை செய்து நாம் முன் செல்ல வேண்டும். பின்னர் புதிய அரசியல் யாப்பை அறிமுகப் படுத்த வேண்டும். மிகவும் நிதானமாக சிந்தித்து அனைத்து இன, மத மற்றும் பொதுமக்களின ஆலோசனைகளைப்பெற்று தென னாபிரிக்க அரசியல் அமைப்பை போன்று புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை இரத்து செய்யப்பட்டு, உரிய நிறுவனங்களுக்கான சுயாதீன தன்மை உருவாக்கப்பட்டு, அரசியலமைப்பு தயாரிக்கப்பட வேண்டும். கட்சி மாற இடமளிக்கக்கூடாது. இவ்வாறான செயற்பாட்டின் மூலமே உறுப்பினர் பதவி ஏல பொருளாக மாறியுள்ளது. உறுப்பினர்களின் சொத்துக்கள், பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

முழுமையான அதிகாரமுள்ள இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைகுழு தேவை. சட்டத்திற்கு இடமளிக்கப்பட வேண்டும். சட்டம் தண்டனை வழங்கும். குற்றவாளிகள் விரட்டி விரட்டி பிடிக்கப்பட வேண்டும். மக்கள் சட்டத்திற்கு பயப்பட வேண்டும்.

கேள்வி : ஊழல் துஷ்பிரயோகம் போன்று வீண்விரயமும் தடுக்கப்பட வேண்டுமல்லவா?

பதில் : ஆம், கடந்த தேர்தலுக்கு எத்தனை கோடிகள் விரயமாக்கப்பட்டன? குறித்த பணத்தை பயன்படுத்தி இன்னுமொரு பராக்கிரம சமுத்திரத்தை கட்டியிருக்கலாம். தேர்தல் சட்டம் மீறப்பட்டது. அன்னதானம் வழங்கப்பட்டது. வேறு நாடுகளில் தேர்தலுக்காகச் செலவிடக்கூடிய நிதிவரம்பு காணப்படுகிறது. அமைச்சரவையை மட்டுப்படுத்த வேண்டும்

அனைத்து இடங்களுக்கும் தகுதியானவர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஐ.தே.கட்சி, சுதந்திர கட்சி என்ற வேறுபாடு எம்மிடம் இல்லை. நாம் அனைவரும் இலங்கையர். இலங்கை இயற்கை வளம் மிக்க, பொருளாதாரத்தில் தன்னிறைவுடைய நாடு. கோடிக் கணக்கில் செலவிட்டு கடலை நிரப்ப முயற்சிக்கின்றனர். அதற்கு எவ்வளவு கற்கள் தேவை? சூழல் எவ்வளவு பாதிக்கப்படும்?

கல் உடைப்பதால் நிலம் பாதிக்கப்படுகிறது. இதனால் மண்சரிவுகள் போன்ற அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான பாதிப்புகளை சந்தித்து, கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிட்டு, சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு பதிலாக நாட்டிலுள்ள குளங்களை மறுசீரமைக்க முடியும். இலங்கையில் 35 ஆயிரம் குளங்கள் காணப்படுகின்றன. விவசாயம், சுகாதாரம், கல்வி, உணவு போன்ற துறைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். துறைமுகம், விமான நிலையம், விளையாட்டு மைதானங்கள் தேவை. ஆனால் அத்தியாவசியமல்ல. வீதிகளை மூடி கோடிக்கணக் கான ரூபாய்களை செலவிட்டு கார் பந்தயம் தேவையில்லை. தாமரை கோபுரம் எமக்கு தேவையா? நாடு முழுக்க கடல். ஆனால் எவ்வளவு மீன்கள் பிடிக்கப்படு கின்றன? கடந்த காலங்களில் தேவையற்றவைக்கே முன்னுரிமை வழங்கப் பட்டுள்ளன. இதை புதிய அரசாங்கம் மாற்றியமைக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் நேர்மையான பொதுவுடமை வாதி



வடபுலத்து பொதுவுடைமை இயக்கம் எழுபது ஆண்டுகள் பாரம்பரியம் உடையது. 1945 ஆம் ஆண்டில் அதற்கான முதல் விதையினைத் தோழர் மு.கார்த்திகேசனும், ஏனைய எட்டுப் பேரும் இணைந்து நாட்டினர். அதனை வளர்த்தெடுப்பதற்கு அன்றைய வடபுலத்துச் சூழலில் பொதுவுடைமை வாதிகள் என்போர் கடும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி வந்தனர்.

பொதுவுடமை இயக்கத்தின் அடிப்படை மாக்சிசமும் விஞ்ஞான சோஷலிசமுமாகும். உழைப்பின் மூலமான சுரண்டலையும், சமூக ஏற்றத்தாழ்வுகளையும், சமூக நீதி மறுப்புக்களையும் எதிர்த்துப் போராடி சமத்துவம் மிக்க சமூகத்தைத் தோற்றுவிக்கப் பயணிப்பதே பொதுவுடைமை இயக்கத்தின் குறிக்கோளும் பணியுமாகும். இதனைச் சொல்லாலும், செயலாலும் முன்னெடுத்து வந்த பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் ஒருவராகவே தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தை நினைவுகூர முடிகிறது.

தோழர் மணியம் என அழைக்கப்பட்ட அவர், வலி. வடக்கு கொல்லங்கலட்டியில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று அருகாமையில் அமைந்திருந்த காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் ஒரு தொழிலிநுட்ப பயிலுநராகப் பணிபுரிந்தார். அக்காலத்திலேயே சர்வதேச தொழிலாளர் இயக்கமான பொதுவுடைமை இயக்கம் பற்றியும் மாக்சிசம், சோஷலிசம் பற்றியும் அறிந்து கொண்டால் அதனால் ஈர்க்கப்பட்ட அவர் தனது தொழிற்சாலைப் பணியினைக் கைவிட்டு பொதுவுடைமைக் கொள்கைகளை முன்னெடுக்கும் தீவிர செயற்பாட்டாளராக மாறிக்கொண்டார்.

அவ்வேளை வடபுலத்தில் பொதுவுடமைக் கட்சி செயற்பாட்டை மு.கார்த்திகேசன் டாக்டர் சு.வே.சீனிவாசகம்,அ.வைததிலிங்கம், அ.இராமசாமி ஐயர், ஏ.கே.கந்தையா, எம்.சி.சுப்பிரமணியம், பொன்.கந்தையா, கே.டானியல், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், வ.பொன்னம்பலம் போன்றோர் முன்னெடுத்து வந்தனர்.

இத்தகையோரின் பொதுவுடைமைக் கட்சியின் தீவிர செயற்பாட்டில் தோழர் மணியமும் தன்னை இணைத்துக் கொண்டார். வெறுமனே ஒரு உறுப்பினராக மட்டுமன்றி கட்சிப் பணிகளை முன்னெடுக்கும் முழுநேர கட்சி ஊழியராகவும் ஆகிக்கொண்டார். முன்னோடித் தலைவர்களைப் போன்று தோழர் மணியம் எளிமையான வாழ்வும் கடுமையான பணியும் மேற்கொண்டு வந்தார்.

**பொதுவுடைமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடி தோழர் கே.ஏ.சுப்பிரமணியத்தின் 25ஆவது நினைவுதினம் இன்றாகும் அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

வடபுலத்துச் சூழலில் புரையோடி இருந்து வந்த சாதிய ஏற்றத்தாழ்வையும் அதன் அசிங்கமான வெளிப்பாடாக இருந்து வந்த தீண்டாமையையும் எதிர்த்துப் போராடி அகற்ற பொதுவுடைமை வாதிகள் கடுமையாக உழைத்தனர்.

அத்தகையோரில் தோழர் மணியம் முதன்மையானவராக இருந்து வந்தார். 1966 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம் திகதி நா.சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சியானது சாதிய தீண்டாமைக்கு எதிரான ஓர் ஊர்வலத்தை சுன்னாகத்திலிருந்து யாழ்.நகர் நோக்கி நடாத்த முன்வந்தது. அதற்கு பொலிஸ் அனுமதி மறுக்கப்பட்டது. பொலிஸ் தடையையும் மீறி அவ் ஊர்வலத்தை முன்னெடுப்பதில் மணியம் முன்நிலை வகித்தார்.

அவ் ஊர்வலத்தைப் பொலிஸ் தடியடி நடாத்தி கலைக்க முற்பட்டது. அத் தாக்குதலில் கே.ஏ.சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி, இ.கா.சூடாமணி ஆகியோர் காயமடைந்ததுடன் கைதும் செய்யப்பட்டனர். இருப்பினும் ஊர்வலம் தொடர்ந்து இடம்பெற்றது.

யாழ்.நகர் முற்றவெளியில் பொதுக் கூட்டம் இடம்பெற்றது. அன்று முதல் பொது இடங்களில் தீண்டாமைக்கு எதிரான இயக்கமும் போராட்டங்களும் இடம்பெற்றன. இவற்றுக்கு புரட்சிகரப் பொதுவுடமைக் கட்சியும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் தலைமை தாங்கி நின்றன.

இப்போராட்டங்களை தலைமை தாங்கி வழி நடாத்தியதில் கே.ஏ.சுப்பிரமணியத்தின் பங்களிப்பு வெற்றிகரமாக அமைந்திருந்தது.


பொதுவுடமை வாதிகளுக்குரிய பொதுப்பண்பான எளிமையான வாழ்வும் கடுமையான கட்சிப் பணியும் மகளுக்கான சேவையும் செய்து மறைந்தவர் தோழர் மணியம் அவர் சுமார் நாற்பதாண்டு காலப் பொதுவுடைமை இயக்க வாழ்வில் தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களினதும் குறிப்பாக பொருளாதார கல்வி பண்பாட்டுத்துறைகளில் ஒதுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வந்த பின் தங்கிய மக்களின் மீட்சிக்காகப் போராடி வந்த ஒருவர்.

அத்தகைய ஒருவரின் 25 ஆவது வருட நினைவு தினம் இன்று நினைவு கூரப்படுகிறது. அந் நினைவு தினக் கூட்டத்தில் சி.கா.செந்திவேல் எழுதிய தோழர் மணியம் நினைவுகள் எனும் நூலும் வெளியிடப்படுகின்றது.

கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள இல.63, தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெறுகிறது.

- வெகுஜனன்.

# மக்கள் வாழ முடியாத மோசமான இடம் டில்லி



இந்தியாவிலேயே வாழ முடியாத மோசமான நகரமாக டில்லி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இசிஏ இன்டர்நஷனல் என்ற நிறுவனம் உலகளவில் வாழ சிறந்த நகரங்கள் எவை என்ற ஆய்வை நடாத்தியது. இதில் இந்தியாவில் வாழ சிறந்த நகரம் பெங்களூர் என்று அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

உலகளவில் வாழ சிறந்த நகரங்கள் பட்டியலில் பெங்களூர் 171 ஆவது இடத்தில் உள்ளது. ஆனால் இந்தியாவில் வாழ சிறந்த நகரம் என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இந்திய நகரங்களில் பெங்களூர் 171 ஆவது இடத்திலும், சென்னை, மும்பை ஆகிய நகரங்கள் 182 ஆவது இடத்திலும் டில்லி 204 ஆவது இடத்திலும் உள்ளன.

உலக அளவிலும், ஆசியாவிலும் வாழ மிகச் சிறந்த நகரமாக சிங்கப்பூர் திகழ்கிறது. இதனையடுத்து அவுஸ்ரேலியாவின் சிட்னி, அடிலெய்டு உள்ளிட்ட நகரங்கள் வரிசையாக உள்ளன.

# 6,000 ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அமெரிக்க தாக்குதலில் பலி

அமெரிக்கா நடாத்திய தாக்குதல்களில் 6,000 இற்கும் மேற்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டின் இராணுவ தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக கடந்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி முதல் அமெரிக்க வான்வழி தாக்குதலை தொடங்கியது.

இந்நிலையில் கடந்த ஆறு மாத காலமாக அமெரிக்க நடத்தி வரும் தாக்குதலில் ஆறாயிரம் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் தலைவர் சக் ஹகேல் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி அளித்த பேட்டியில், ஆறு மாதங்களாக அமெரிக்கா நடாத்திய தாக்குதலால் ஐ.எஸ்.ஐ.எஸ் மேற்கொண்டு முன்னேற முடியாமல் முடங்கியுள்ளது.

சுமார் 2 ஆயிரம் வான்வழி தாக்குதல்களை நடாத்தி, 700 சதுர கிலோ மீற்றர் நிலத்தை மீட்டுக் கொடுத்துள்ளோம். தீவிரவாதிகளின் முக்கியமான நிலைகள் மீது தாக்குதல் நடாத்தியுள்ளோம்.

இதில் தீவிரவாதிகளின் இராணுவ மையங்கள், எரிபொருள் நிரப்புமிடங்களும் அடங்கும் என்றும், இதன் காரணமாக தீவிரவாதிகளின் கரங்கள் நீளாமல் பார்த்துக் கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# மெக்சிக்கோவில் பஸ் தீப்பிடித்து 16 பேர் பலி, 20 பேர் காயம்



(மெக்சிகோ நகரம்)

மெக்சிகோ நாட்டின் வடமேற்கு பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றி சென்ற பஸ், சாலை திருப்பத்தில் உருண்டு கவிழ்ந்து தீப்பிடிதததது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த 16 பேர் பரிதாபமாக பலியானார்கள். மேலும் 20 பேர் படுகாயம் அடைந்தனர். மெக்சிகோ நாட்டின் வடமேற்கே சோனாராவில் இருந்து நேற்று முன்தினம் மதியம் ஒரு பஸ் 50 இற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு வடக்கு எல்லை நகரான திஜுவானாவுக்கு சென்று கொண்டிருந்தது.

அப்போது சியுடாட் ஒப்ரிகான் என்ற இடத்தில் ஒரு சாலை திருப்பத்தில் பஸ் திரும்பியபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் அந்த பஸ்சாலை அருகே பள்ளத்தில் உருண்டு கவிழ்ந்தது.

இதில் பஸ்ஸின் டீசல் தாங்கி வெடித்து சிதறி, பஸ் தீப்பிழம்பாக எரியத் தொடங்கியது.

இந்த விபத்தில், பஸ்ஸின் இடிபாடுகளில் சிக்கிய 16 பேர் உயிரோடு எரிந்து கருகிவிட்டனர். மேலும் 20 பேர் பலத்த தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர்.

மற்றவர்களை தேடும் பணி நடைபெறுகிறது. பஸ் விபத்து குறித்து விசாரணை நடைபெறுகிறது என்று சோனாரா நகரின் பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி கார்லஸ் ஜீசஸ் ஏரிஸ் கூறினார்.

# சிரியா எல்லையில் தாக்குதல் ஐந்து இராணுவ வீரர்கள் பலி

(மாஸ்கஸ்)

லெபனான் நாட்டில் சிரியா எல்லை பகுதியில் தீவிரவாதிகள் ஊடுருவினர். இதனால் தீவிரவாதிகளுக்கும் லெபனான் இராணுவத்துக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

அர்சால் நகரம் அருகே ராஸ் பலால்பெக் கிராமத்தில் நடந்த இந்த சண்டையில் லெபனானை சேர்ந்த 5 இராணுவ வீரர்கள் பலியாகினர். அவர்களில் அதிகாரி ஒருவரும் அடங்குவர்.

அதேநேரத்தில் தீவிரவாதிகள் தரப்பில் 9 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# பெஷாவர் பள்ளிக்கூட தாக்குதலில் பலியானவர்களுக்கு விருது



பாகிஸ்தான் நாட்டில் கடந்த டிசம்பர் 16 ஆம் திகதி பெஷாவர் நகரில் உள்ள இராணுவ பள்ளிக்குள் நுழைந்த 6 தீவிரவாதிகள் அங்கு இருந்த மாணவர்கள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் பள்ளி ஊழியர்கள் உட்பட 157 பேரை மிருகத்தனமாக சுட்டுக் கொன்றனர். இந்தத் தாக்குதலில் பலியான மாணவர்கள் மற்றும் பள்ளி ஊழியர்களுக்கு வீரதீர செயலுக்கு உரிய பதக்கம் (தம்கா இ-சுஜாத்) வழங்க பாகிஸ்தான் ஜனாதிபதி மாம்னூன் ஹூசைன் முடிவு செய்துள்ளார். இந்த விருது தீவிரவாதிகள் தாக்குதலில் மரணம் அடைந்த அந்நாட்டு குடிமக்களுக்கு வழங்கும் விருது ஆகும். அதுபோல் பெஷாவர் தாக்குதலில் காயம் அடைந்தவர்களுக்கும் சில விருதுகள் வழங்க முடிவு செய்யபட்டுள்ளன.

# தீவிரவாதத்திற்கு ஆதரவளிப்பதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்



(புதுடில்லி)

தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது என பாகிஸ்தானுக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடையவர்களை நீதியின் முன் பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக இந்தியாவைச் சேர்ந்த வாரப் பத்திரிகை ஒன்றுக்கு மின்னஞ்சல் மூலமாக அவர் அளித்துள்ள பேட்டியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பயங்கரவாதக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கையில், அமெரிக்கா ஒருபோதும் கருணை காட்டாது. பயங்கரவாதத்தால் எழும் அச்சுறுத்தலை முறியடிக்கவே, பாகிஸ்தானுடன் அமெரிக்கா இணைந்து செயற்பட்டு வருகிறது என்பதையும், பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு புகலிடங்கள் அளிக்கப்படுவதை ஒருபோதும் ஏற்க முடியாது என்பதையும் தெளிவுபடுத்திக் கொள்கிறேன்.

மும்பை பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் உள்ளவர்களை நீதியின் முன் பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்.

எதிர்காலத்தில் அனைவரும் கண்ணியமாக, வளமாக, பாதுகாப்பாக வாழ்வதற்கு இந்தியாவுடன் அமெரிக்கா இணைந்து செயற்படும் என்றார் ஒபாமா.

# கட்டாயப்படுத்தி கற்பழிக்கப்படுகிறோம் தீவிரவாதிகளிடமிருந்து வந்த பெண் குமுறல்



நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகளிடமிருந்து தப்பி வந்துள்ள பெண் ஒருவர் தீவிரவாதிகளால் பெண்கள் கட்டாயப்படுத்தப்பட்டு கற்பழிக்கப்படுவதாக பேட்டியளித்துள்ளார்.

நைஜீரியாவில் தனி நாடு கோரி அரசுக்கு எதிராக போகோ ஹராம் தீவிரவாதிகள் தொடர்ந்து பல குண்டு வெடிப்புகளையும், தற்கொலைப்படை தாக்குதலையும் நடாத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு இராணுவத்தை தோற்கடித்து பர்கா (Baga) நகரை கைப்பற்றிய தீவிரவாதிகள் அங்குள்ள பெண்களை சிறைப்பிடித்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி வருவதாக, தீவிரவாதிகளின் பிடியிலிருந்து தப்பி வந்த பெண் ஒருவர் பேட்டியளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் பி.பி.சி.யிடம் அளித்த பேட்டியில் பேசியதாவது, பெண்களைக் கடத்தி சென்று கட்டடம் ஒன்றில் வைத்துள்ள தீவிரவாதிகள் இரவு நேரங்களில் அவர்களை கற்பழிக்கின்றனர் என்றும் அவர்களின் பிடியில் ஏராளமான பெண்களுடன் இருந்த நானும் சிலரும் அதிர்ஷ்டவசமாக தப்பி வந்துள்ளோம் எனவும் கண்ணீர் மல்க பேட்டியளித்துள்ளார்.

# குடிநீர் தருவதால் மட்டும் பிரச்சினையை தீர்க்க முடியாது

## யாழ். மருத்துவபீட பீடாதிபதி பாலகுமாரன் தெரிவிப்பு

சுன்னாகம் பகுதியில் கழிவு எண்ணெயால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு குடிநீர் தருவதால் மட்டும் பிரச்சினையை தீர்த்து விட முடியாது. குடிநீரை விட உணவுச்சங்கிலி மூலம்தான் பாதிப்புக்கள் ஏற்பட வாய்புக்கள அதிகம் உள்ளது என யாழ். மருதது வ பீட பீடாதிபதி ச.பாலகுமரன், தெரிவித்தார்.



சுன்னாகம் சிவன் கோவில் திருமண மண்டபத்தில் நேற்று சுற்றுச்சூழல் அமையத்தின் ஏற்பாட்டில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு அவர மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சுன்னாகம் பகுதியில் 150 கிணறுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 109 கிணறுகளில் கழிவு எண்ணெய் கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இது பல இடங்களில் விஸ்தரிக்கப்படும் தன்மை காணப்படுகின்றது.

வலிகாமம் நீர்ப்படுக்கையில் கழிவொயில் கலந்த குடிநீர் மக்களை சென்றடைய வாய்ப்பு உள்ளது. அத்துடன் இது விவசாயம் செய்யும் நிலவளம் உள்ள பிரதேசம். உணவுச்சங்கிலி மூலம் இந்த கழிவு எண்ணெயில் இருக்கும் ஐதரோகாபன், பார உலோகங்கள் மக்களையும் மிருகங்களையும் அடைய வாய்ப்பு உளது.விவசாய உற்பத்தி பொருட்கள் யாழ் பிரதேச மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து பிரதேச மக்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் புற்று நோய், இரத்தச்சோகை, நரம்புமண்டல பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு, குறைபாடு உள்ள பிள்ளைகள் பிறப்பு என பல பாதிப்புக்கள் ஏற்படும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றது. வேறு நாடுகளில் இவ்வாறான பாதிப்புக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

எனவே முதற் கட்டமாக நிலப்படுக்கையை உரிய முறையில் சுத்தம் செய்ய வேண்டும். நீரோட்டத்தில் கழிவொயில் எங்கு கலந்துள்ளது என்பதைக் கண்டறிந்து அதை அகற்ற வேண்டும். அவ்வாறு சுத்தம் செய்த பின்னர்தான குடிநீர் பாவனை, விவசாய செய்கை என்பன மேற்கொள்ள முடியும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

மருத்துவபீடம் என்ற வகையில் எமக்கு பொறுப்பு உள்ளது. எனவே இந்த பிரச்சினை தொடர்பாக நீண்டகாலமாக விரிவாக ஆராய்ந்து முன்மொழிவுகளை வைத்துள்ளோம் சில காரணங்களால் அதை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.

ஆனால் இப்போது அனைவரின் ஆதரவுடனும் கூடிய அளவு பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கண்டறிந்து அங்கு இருப்பவர்களுக்கு நோய்த்தாக்கம் இரத்தச்சோகை எவ்வாறு இருக்கின்றது, பீனோலின் அளவு எவ்வாறு இருக்கிறது, பரம்பரை அலகில் மாற்றம் ஏற்பட வாய்பிருக்கின்றதா? என மூன்று விடயங்களையும் உடனடியாக பரிசோதனை செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

இந்த எதிர்வு கூறல் நிரூபிக்கப்படும் வரை எமது பணிகள் தொடரும். அத்துடன் யாழ் பல்கலைக்கழக அனைத்து பீடங்களும் இந்த விடயத்துக்கு ஆதரவாகவும் ஆர்வமாகவும் இருக்கிறார்கள். இந்த பிரச்சினை தொடராமல் இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

### சமையல்..

காப்பு அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மீள்குடியேறிய...

வசதிகளை வழங்குதல் போன்றவற்றில் சில குறைபாடுகள் காணப்பட்டதாகவும், எனினும் தற்போதைய அரசாங்கம் அவ்வாறான தடைகளை ஐரோப்பிய ஒன்றித்தின் உதவியுடன் தகர்க்கும் என நம்புவதாகவும் அமைச்சர் சுவா மிநாதன் இதன்போது குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வெளிநாட்டு சமூகத்துடன் நெருங்கிய உறவைப் பேன இலங்கையின் தற்போதைய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### பேருந்து...

எரிபொருள் விலைக்குறைப்பிற்கு அமைவாக பஸ் கட்டணங்களையும் குறைக்கும் நோக்கில் அமைச்சு மட்டத்திலான பேச்சுவார்த்தை முன்னெடுககப்படுவதாக உள்ளக போக்குவரத்து அமைச்சர் கூறினார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் தனியார் பஸ் சங்கத்தினர் ஆகிய தரப்புகளுடனும் அடுத்த வாரத்திற்குள் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு எண்ணியுள்ளதாகவும் ஆயினும், ரயில் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளதனால் முச்சக்கரவண்டி கட்டணம் குறைக்கப்படாது என முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

### அதிபர்களுக்கான..

அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் பணிப்புரைக்கமையவே இதனை இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். முன்னர் இருந்த அரசாங்கத்தின் ஏற்பாட்டில், பாடசாலை அதிபர்களுக்கு, இராணுவ முகாம்களில் தலைமைத்துவ பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், பயிற்சியைப் பெற்ற அதிபர்களுக்கு இராணுவப்பட்டமும் வழங்கப்பட்டது. இந்த தலைமைத்துவப் பயிற்சியின் மூலம் 4,000 அதிபர்கள் இராணுவ பட்டங்களைப் பெற்றதுடன் 2013ஆம் ஆண்டில அதிபரொருவர் உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### புதிய...

நேற்றுக் காலை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,


ஜனாதிபதித்தேர்தலில் யாரை ஆதரிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் கருத்துக்களை கேட்ட போது இது ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானம் என கூறினார்கள். இது அப்பட்டமான பொய். தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாவட்ட ரீதியாக உள்ளுராட்சி சபை உறுப்பினர்களிடம் கட்சி உறுப்பினர்களிடம் கருத்து கேட்டோம். குறிப்பாக தமிழரசுக் கட்சி அதன் கிளைகளைக்கூட்டி கருத்துக்களை கேட்டது. பல வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்திததோம். அவர்களிடமும் கருத்து கேட்டோம். அந்த தீர்மானத்தின் அடிப்படையிலேயே இராஜதந்திர ரீதியாக எடுக்கப்பட்ட எமது முடிவை மகிந்த இனவாத ரீதியாக விமர்சிக்க காலம் வழங்காது அறிவித்தோம்.

தென் இலங்கையில் ஏற்பட்ட இந்த கிளர்ச்சி சர்வதேச ரீதியில் செல்வாக்கு செலுத்தியது. அதனால் தான் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் எல்லாம் கவனம் செலுத்தின. நாம் அவர்களிடம் கதைத்தோம். அதன் அடிப்படையிலேயே எமது முடிவையும் வெளியிட்டோம். மக்கள் எமது கருத்தை கேட்டார்கள். அதனால் பெருவாரியாக வாக்களித்தார்கள். தேர்தலை எதிர்கொள்ளாதுவிடின் அரசியல் கட்சியாக இருக்க முடியாது. அதனாலேயே எமது முடிவை அறிவித்தோம். மைத்திரியை ஆதரித்தோம்.

நாங்கள் இந்த புதிய அரசையும் நம்பி நடக்கவில்லை. அந்த அரசுடன் எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை. ஆனால் தற்போது எமது மக்களின் காணிப்பிரச்சினை, அரசியல் கைதிகள் பிரச்சனை, தீர்வுத் திட்டம் குறித்து பேசி வருகின்றோம். அவர்களும் சிலதை செய்கிறார்கள். செய்வதாக கூறுகிறார்கள். நாம் வவுனியாவில் நடந்த கட்சி மாநாட்டில் இந்த அரசசு எமது பிரச்சினையை தீர்க்காது போனால் தைத்திங்களில் ஜனநாயக போராட்டம் வெடிக்கும் என தெரிவித்தோம். ஆனால் இன்று புதிய அரசு வந்துள்ளது. சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. மீள்குடியேற்றுவதாக சொல்கிறார்கள். வடமாகாணசபையில் மாற்றம் வந்துள்ளது. காணிகளை வழங்குவதாக கூறியுள்ளார்கள். இதனால் எமது பிரச்சனையை தீர்க்க காலம் தேவை. அதனை நாம் வழங்கி எமது போராட்டத்தை பிற்போட்டுள்ளோம். எமக்கு தீர்வு கிடைக்காது போனால் எமது மக்களை தயார்படுத்தி கூறியபடி எமது ஜனநாயக போராட்டம் நடக்கும் அதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். இது ஒரு பரீட்சார்த்த காலம். சர்வதேச் ஒத்துழைப்புடனயே நாம் செயற்பட்டோம். எனவே எமக்கான தீர்வு வராதுவிடின் எமது போராட்டம் தொடரும் எனத் தெரிவித்தார்.

# வேலைத்திட்டங்களை பூர்த்திசெய்ய மேலதிக நிதி ஒதுக்கீடுகள் அவசியம்

## வேலணைபிரதேச சபை தவிசாளர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்கருதி மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களை மேலும் முன்னெடுத்து பூர்த்தி செய்ய மேலதிகமான நிதி ஒதுக்கீடுகளை புதிய அரசு மேற்கொள்ளவேண்டும் என ஜனாதிபதியிடம் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா (போல்) வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், ஜனாதிபதியை காழும்பில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது தமிழ் மக்களின் தேவைகள் பல பூர்த்தியடையாத நிலையில் உள்ளன. அதற்கான வேலைத்திட்டங்களும் பூர்த்தியடையாமலேயே இருக்கின்றன. அவற்றை மேற்கொள்ள மேலதிக நிதி ஒதுக்கீடுகள் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கவேண்டும் அத்துடன் மக்களின் நலனை கருத்தில் கொண்டு தாங்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவேண்டும் ஆட்சியில் மாற்றம் வேண்டும் என்பதற்காக வாக்களித்த மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் புதிய அரசின் 100நாள் வேலைத்திட்டத்திற்கு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் ஆதரவு எப்போதும் இருக்கும் அதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதுடன் மக்களின் வாழ்க்கைத்தர அபிவிருத்திக்கு நாம் எப்போதும் ஆதரவளிப்போம் என மேலும் தெரிவித்துள்ளார்.

### உண்ணாவிரதம்...

குறித்த விடயம் தொடர்பில் சுன்னாகம் சிவன்கோவிலுக்கு முன்பாக நேற்று முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தின் ஒழுங்கமைப்பாளர்கள் மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளனர்.குறித்த பத்திரிகையாளர் சந்திப்பில் சூழல் பாதுகாப்பு அமையம் மற்றும் உண்ணாவிரதிகள் மற்றும் மக்கள் கலந்து கொண்டனர்.

### நாவலர்..

10 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இரகசிய கமரா பொருத்தப்பட்டிருந்தமையால் இச்சம்பவம் குறித்த ஆதாரங்கள் வீட்டு உரிமையாளரினால் யாழ். பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து துரிதமாக செயற்பட்ட யாழ். பொலிஸார் நாயன்மார்கட்டைச்சேர்ந்த இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் மாலை கைது செய்து யாழ்.நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தியுள்ள நிலையில் வரும் பெப்ரவரி 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இக்கொள்ளைச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (54)

### 13ஆவது...

தொடர்பாக நாம் தொடர்ச்சியான பேச்சுக்களை நடாத்தி வருகின்றோம்.

நாட்டிலுள்ள அனைத்து மாகாணசபைகளுக்கும் சம அளவிலான அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் நாட்டை பிளவு படுத்தாத தீர்விற்கு தயாரென தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் தெரிவித்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சிறுபான்மைத் தமிழத்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு முன்னைய அரசாங்கம் தவறிவிட்டதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பாக ஐ.நா.வில் விசாரணை வருவதற்கும் ராஜபக்ஷவின் அரசாங்கமே காரணமாகும். இறுதிக்கட்ட போர்முடிவடைந்த பின்னர் அது தொடர்பான விசாரணை நடாத்தப்படுமென ஐ.நா.செயலருக்கு முன்னைய அரசாங்கமே உறுதியளித்திருந்தது. அதனை பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலும் உறுதிப்படுத்தியிருந்தது. ஆனால் விசாரணை எதுவும் நடாத்தப்படவில்லை இதனாலேயே ஐ.நா. விசாரணை நடாத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

புதிய அரசின் கொள்கைத் திட்டத்தின்படி அனைத்து குற்றம் தொடர்பான விசாரணைகளும் உள்நாட்டிலேயே மேற்கொள்ளப்படும். இலங்கை நீதிமன்றங்களே குற்றவியல் விசாரணைகளுக்குரிய தண்டனைகளை வழங்கும்.

அத்துடன் நிவாரணங்கள் மூலம் மக்கள் நன்மை அடைய வேண்டும்.இதன் காரணமாகவே பெற்றோல் உள்ளிட்ட எரிதிரவங்களின் விலைகள் குறைக்கப்பட்டன.

இதன் காரணமாக தற்போது நாட்டில் உள்ள 10 இலட்சத்துக்கும் அதிகமான முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் நன்மை அடைவார்கள்.

முன்னாள் அரசாங்கம் பொது மக்களுக்கு வழங்கக்கூடிய நிவாரணத்தை மோசடி செய்திருக்கிறது.

கடந்த நான்கு வருடங்களில் பாரிய அளவு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைத்திருக்க முடியும்.

ஆனால் அதனை முன்னாள் அரசாங்கம் செய்யவில்லை.

கிராம மக்களின் கைகளில் பணம் புரளும் வகையிலான பொருளாதாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறு செய்தால் அடிமட்ட வர்த்தகங்கள் அதிகரிக்கும்.

இதனால் அரசாங்கத்துக்கு வரிவருமானமும் கூடும். இதுதான் வரி வருமானத்தைக் கொண்டு அரசாங்கத்தை கட்டியெழுப்புவதற்கான வழி. இதனை விடுத்து நேரடியாக அத்தியாவசியப் பொருட்கள் மீது வரியை அதிகரிப்பதால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என்று பிரதமர் கூறியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 29ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால வரவு செலவுத்திட்டத்தின் போது விலைக்குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ள அத்தியாவசியப் பொருட்கள் குறித்த விபரங்கள் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்.பல்கலை பேரவை உறுப்பினர்கள் பதவி நிலைக்கு பொருத்தமற்றவர்களா?

(யாழ்ப்பாணம்)

**யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில சங்கங்கள் அமைப்புக்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளில், பல்கலைக்கழக பேரவையின் வெளிவாரி உறுப்பினர்கள் அந்தப் பதவி நிலைக்கு எவ்வித தகுதியுமற்றவர்கள் என்றவிதமான - முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, தவறான உள்நோக்கம் கொண்ட கருத்துக்கள் 'எழுந்தமானத்துக்கு வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், உண்மை நிலை இதற்கு முற்றிலும் மாறானதாகும் என்பதை நாம் அனைவரது கவனத்துக்கும் கொண்டுவர விரும்பு கிறோம் என பேரவை வெளிவாரி உறுப்பினர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,**

பல்கலைக்கழகங்களின் அதியுயர் சபையாக கருதப்படும் பேரவையில், உள்வாரி உறுப்பினர்களாக இருக்கும் துணை வேந்தர், பீடாதிபதிகள், மூதவை பிரதிநிதிகள் உள்ளிட்ட புலமையாளர்களுடன், வெளிச்சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, சமூகத்தில் மதிப்பார்ந்த சேவையை வழங்கிவரும கல்வி, தொழில்சார், வணிக, கைத் தொழிற்றுறை, விஞ்ஞான மற்றும் நிர்வாகத்துறை சார்ந்தவர்கள் வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டும் என்ற, 1985ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சட்டத்தின் 44 (1) 7 பிரிவின்படி வெளிவாரி உறுப்பினர்கள் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்றனர்.

இதன்படி, யாழ் பல்கலைக்கழகத்தின் 13 உள்வாரி உறுப்பினர்களுடன், மேலதிகமாக ஒருவர் இருக்கும் வகையில் 14 வெளிவாரி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் பல்கலைக்கழகத்தில் தற்போது இடம்பெறும் இந்த வெளிவாரி உறுப்பினர்களில், யாழ் பல்கலைக்கழகத்தில் இரண்டு தடவைகள் துணைவேந்தராக இருந்த பேராசிரியர், சதம்டன் பல்கலைக்கழக கலாநிதி பட்டம் பெற்ற குருமுதல்வர், பிரித்தானிய சிற்றி பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை முதுமானி மற்றும் பாராளுமன்றத்தில் உயர் பதவிகளை வகிக்கும் தகுதியுடையவர் என்று சான்றிதலளிக்கப்பட்டவர், சட்டத்துறை முதுமானிப் பட்டம் பெற்ற சொலிசிற்றர் மற்றும் சட்டத்தரணி, பல அமைச்சுக்கள், திணைக்களங்கள், அதிகாரசபைகளில் நிதி முகாமைத்துவ நிபுணராக இருந்த பட்டயக் கணக்காளர், சிரேஷ்ட பட்டய பொறியியலாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அதிபர் தரம் ஒன்றைச்சேர்ந்த முன்னாள் பாடசாலை அதிபர், யாழ் கூட்டுறவு பயிற்சி மையத்தின் அதிபர், கல்வி வழிகாட்டி ஆலோசகரும், சிரேஷ்ட ஊடகவியலாளரும் என, யாழ்ப்பாண சமூகத்தின் முக்கிய உயர் பதவி நிலைகளில் இருப்பவர்களே தற்போதைய பல்கலைக்கழக வெளிவாரி பேரவை உறுப்பினர்களாக இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக யாழ் பல்கலைக்கழக வெளிவாரி பேரவை உறுப்பினர்களாக இருந்து சேவை செய்து வருபவர்களாவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்த வெளிவாரி உறுப்பினர்கள் பேரவையில் அங்கம் வகித்த காலத்திலேயே, யாழ்ப்பாணத்தின் பல தசாப்த கால கனவாக இருந்து வந்த பொறியியல் பீடம் ஆரம்பிக்கப்பட்டது என்பதுடன், கிளிநொச்சி அறிவியல் நகரில் பலநூறு ஏக்கர் காணி யாழ் பல்கலைக்கழகத்துக்கென பெற்றுக்கொள்ளப்பட்டு, நிலப்பரப்பு அளவில் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அடுத்த நிலைக்கு யாழ் பல்கலைக்கழகம் உயர்ந்தது. மேலும், இராமநாதன் நுண்கலைப்பீடம் மற்றும் சித்த மருத்துவ பீடம் என்பன தனி அலகுகளாக மாற்றப்பட்டதுடன், வவுனியா பல்கலைக்கழக வளாகமும புதிய கட்டடங்களுடன் நவீனமயப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமன்றி, யாழ் பல்கலைக்கழகத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளும், கட்டடவாக்கப் பணிகளும், மற்றும் கல்வி நிலையில் அதன் முன்னேற்றத்துக்கு அவசியமான பல்வேறு முக்கியமான ஆராய்ச்சிப் பணிகள், சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, கற்கைநெறி விரிவாக்கம், மாணவர் நலன்சார் திட்டங்கள் உள்ளிட்ட பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.


உண்மைநிலை இதுவாக இருக்க, இந்த வெளிவாரி பேரவை உறுப்பினர்கள் கல்வித் தகைமை ஏதுமில்லாதவர்கள் என்றும், புத்திஜீவிகள் அல்ல என்றும் குறிப்பிட்டு, இவர்களால் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சமூகத்தில் வெளிவாரி பேரவை உறுப்பினர்கள் தொடர்பாக முற்றிலும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில அமைப்புக்களே வெளியிட்டு வருவது வேதனைக்குரிய ஒரு விடயமாகும்.

அதுவும், கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக இந்தப் பேரவை உறுப்பினர்கள் தொடர்பாக எதுவித குற்றச்சாட்டுக்களும், உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழக அமைப்புக்கள் என எந்த ஒரு மட்டத்திலிருந்தும் வராத நிலையில், இப்போது திடீரென வருவதன் உள்நோக்கம் என்ன என்கின்ற கேள்வியும் இங்கே எழுகிறது.

பல்கலைக்கழகத்தின் அதியுயர் சபையான பேரவை தொடர்பாக, இவ்வாறு உண்மை நிலையைத் திரிபுபடுத்தி சமூகத்தை தவறாக வழிநடத்தும் விதமான கருத்துக்களை வெளியிடுவதானது, உண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தின் நற்பெயரையும், வளர்ச்சியையும் மட்டுமன்றி, ஒட்டுமொத்த கல்விச் சமூகத்தின் முன்னேற்றத்தையும், தமிழ் மண்ணையுமே பாதிப்படையச் செய்யும் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க அப்பிள்களை வாங்குவதை தவிருங்கள்

## கிருமி பரவுவதாக எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

2015 ஆம் வருட ஆரம்பத்தில் Listerio manocytoges கிருமி சம்பந்தமான நோய் அமெரிக்கா மற்றும் கனடாவில் கட்டுக்கடங்காமல் பரவியுள்ளது என எச்சரிக்கை அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அப்பிள் வாங்கும் போது குறித்த நாட்டு அப்பிள்களை வாங்காது தவிர்க்குமாறு வேண்டப்படுகின்றனர்.ஏனெனில் குறித்த நாட்டு அப்பிள்கள் மூலம் குறித்தவகைக் கிருமியா[illegible] பரவக் கூடிய சந்தர்ப்ப[illegible] உண்டு.

# வட்டுக்கோட்டை இளைஞர் கள்ள நோட்டுடன் கைது

1000 ரூபா கள்ள நோட்டு வைத்திருந்த நபரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ் வட்டுக் கோட்டை பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் தனது வாகனத்திற்கு பெற்றோல் நிரப்பி விட்டு அங்கிருந்த ஊழியரிடம் காசு கொடுத்துள்ளார்.

அப்போது அவர் கொடுத்த காசு கள்ள நோட்டு என்பதனை உணர்ந்த ஊழியர் யாழ் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியுள்ளார்.

அந்த தகவலின் பிரகாரம், குறித்த இளைஞரை யாழ்.பொலிஸார் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளவுள்ளதாகவும் யாழ். பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(25)

# மறைத்துவைக்கப்பட்ட கெப்ரக வாகனம் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான மறைத்து வைக்கப்பட்டிருந்த கெப் வாகனம் சீனக்குடா பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து அனுராதபுர சந்திக்கும் நாலாம் கட்டை பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இவ்வாகனம் மீட்கப்பட்டுள்ளதாகவும் அதில் சென்ற மூன்று பேரிடம் பொலிஸார் வாக்கு மூலத்தினை பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது.

குறித்த WP-PA4549 எனும் இலக்க வாகனத்தை பொருளாதார அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்காமல் சொந்த தேவைகளுக்காக பயன்படுத்த முற்பட்ட போதே மீட்கப்பட்டதாகவும் உயர் அதிகாரியொருவர் குறிப்பிட்டார். தற்போது விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஓய்வு பெற்ற அதிபருக்கு பாராட்டி கௌரவிப்பு

கோண்டாவில் இராம கிருஷ்ண மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி கடந்த 18ஆம் திகதி ஓய்வு பெற்ற சண்.வாம தேவன் கொக்குவில் விக்கினேஸ்வரா தனியார் கல்வி நிலைய பழைய மாணவர்களால் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் இன்று பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வு விக்கினேஸ்வராக்கல்வி நிலைய பழைய மாணவன் பா.பாலவரைதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் பொற்பதி பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாரம்பரிய கிராமிய நடனத்துடன் கோலாகலமாக அழைத்துவரப்பட்டு இப்பாராட்டு நிகழ்வு கொக்குவில் நாமகள் வித்தியா லயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(85)

# 1277 இலங்கையர்கள் கடந்த வருடம் சுவிஸில் தஞ்சம்

(கொழும்பு)

சுவிட்ஸர்லாந்தில் கடந்த ஆண்டு 1277 இல்ங்கையர்கள் அரசியல் அடைக்கல கோரிக்கையை முன்வைத்துள்ளனர். இது முன்னைய ஆண்டுகளை காட்டிலும் 87 வீத அதிகரிப்பாகும். சுவிசில் அடைக்கலம் கோரியுள்ளவர்களில் இலங்கையர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை, மொத்தமாக சுவிட்ஸர்லாந்தில் அடைக்கலம் கோரியவர்களின் எண்ணிக்[illegible] கடந்த காலங்களை விட 11 வீதத்தால் அதிகரித்து 23,765 ஆக இருந்தது.

பல்வேறு நாடுகளிலும் இடம்பெற்று வரும் உள்நாட்டு பிரச்சினைகளே இதற்கான காரணங்களாகும். எரிரியாவில் இருந்து அதிகமான 6923 பேர் சுவிட்ஸர்லாந்தில் கடந்த வருடம் அடைக்கலம் கோரியுள்ளனர்.

# ச.தொ.ச.ஊழல் குறித்து விசாரிக்க குழு நியமனம்

## உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நடவடிக்கை




சதொச நிறுவனத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதிகள், கணக்காய்வாளர்கள் மற்றும் வருமான வரி அதிகாரிகள் ஆகியோர் விசாரணைக் குழுவில் உள்ளடக்கப்படுவார்கள் என அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா குறிப்பிட்டார்.

நிறுவனத்தில் ஊழல் மோசடிகள் இடம் பெற்றுள்ளனவா என்பது தொடரபில் முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு, அது தொடர்பான சிபாரிசுகளை இந்தக குழு அமைச்சரிடம் கையளிக்கவுள்ளது.

இதன் பின்னர் உரிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

அத்துடன், உணவுத் திணைக்களம் உள்ளிட்ட மேலும் சில நிறுவனங்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக மற்றுமொரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.


## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?



**இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.**

(C/3775)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஜனவரி 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.